அந்தரங்கமானது

OLD

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2020

## 33 - கணக்கீடு

## பழைய பாடத்திட்டம்

## புள்ளியிடும் திட்டம்

Department of Examinations

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காக தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# க.பொ.த (உயர் தரப்) பரீட்சை – ஆகஸ்ட் 2020

# 33 - கணக்கீடு

## புள்ளி வழங்கும் திட்டம்

Department of Examinations

## பழைய பாடத்திட்டம்

| | | | |
|---|---|---|---|
| வினாத்தாள் I | : | 4 x 50 | = 200 |
| வினாத்தாள் II | : | | = 200 |
| மொத்தம் | | | 400 |

இறுதிப் புள்ளி = $400 \div 4$

= 100

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) .............................................................. ✓ △ 4/5
..............................................................
..............................................................

(ii) .............................................................. ✓ △ 3/5
..............................................................
..............................................................

(iii) .............................................................. ✓ △ 3/5
..............................................................
..............................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

Department of Examinations

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன்பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

## கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

Department of Examinations

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்/ Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

| | | | |
|---|---|---|---|
| ගිණුම්කරණය I<br>கணக்கீடு I<br>Accounting I | 33 T I | | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>Two hours |

**அறிவுறுத்தல்கள் :**

- ❊ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❊ 1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, **அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- ❊ 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- ❊ ஒவ்வொரு வினாவுக்கும் **சமனான** புள்ளிகள் உரித்தாகும்.
- ❊ உங்கள் **சுட்டெண்ணை** மேலே கொடுக்கப்பட்டுள்ள கூட்டினுள் தெளிவாக எழுதுக.
- ❊ **செய்நிரலாக்கத்தகா (Non - Programmable) கணிப்பான்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.**

சுட்டெண் : ..............................

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| | ஒப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரீட்சகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

| வினாத்தாள் I இற்கானது | |
|---|---|
| வினா இல. | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

**1.** நிறுவனமொன்றின் நிதிக்கணக்கீட்டின் **பிரதான நோக்கம்** யாது?
(1) சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்க கொடுக்கல் வாங்கல்களைப் பதிதலும் அறிக்கையிடலும்
(2) கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க பொது நோக்க நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்
(3) நிதிக் கூற்றுக்களின் ஊடாக வருடாந்த வெளியக கணக்காய்விற்கான தகவல்களை வழங்கல்
(4) அக்கறையுடையோர் தீர்மானம் மேற்கொள்வதற்கான தகவல்களை வழங்குதல்
(5) முகாமையாளர்கள் தீர்மானம் மேற்கொள்வதற்கான நிதித் தகவல்களை வழங்குதல் (......)

● **2, 3, 4, 5 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

நந்தன் என்பவர் எழுதுபொருட்கள் வியாபாரக் கடையொன்றினை 01.01.2020 இல் ஆரம்பித்தார். அவரின் சகோதரரான சுரேஸ் அவ்வணிகத்தின் ஒரேயொரு தொழிலாளர் ஆவர். பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் 2020 ஜனவரி மாதத்தில் இடம்பெற்றுள்ளன.

| இல. | கொடுக்கல் வாங்கல் | தொகை (ரூ.'000) |
|---|---|---|
| 1 | வணிகத்தை ஆரம்பிப்பதற்கு நந்தனால் காசு முதலிடப்பட்டது | 300 |
| 2 | காசுக்கு எழுதுபொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன | 200 |
| 3 | கடனிற்கு எழுதுபொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன | 550 |
| 4 | குறைபாடுகள் காரணமாக கடனிற்குக் கொள்வனவு செய்யப்பட்ட எழுதுபொருட்களில் ஒருபகுதி திருப்பியனுப்பப்பட்டது | 50 |
| 5 | கடனிற்கு எழுதுபொருட்கள் விற்பனை செய்யப்பட்டது. இது ரூ. 64 000 பெறுமதிசேர் வரி (VAT) இனையும் உள்ளடக்கியுள்ளது | 864 |
| 6 | சுரேஸிற்கு சம்பளம் செலுத்தியது | 40 |

இம்மாதத்தில் விற்பனை செய்யப்பட்ட எழுதுபொருட்களின் கிரயம் ரூ. 500 000 ஆகும். 31.01.2020 இல் வணிகத்தினால் செலுத்தவேண்டிய மின்சாரக்கட்டணம் ரூ. 30 000 ஆகும். கொள்வனவுகள், ஏனைய செலவுகளின் மீது VAT இல்லை எனக் கருதுக.

**2.** கொடுக்கல் வாங்கல்கள் **2, 3, 4, 5** ஆகியவற்றைப் பதிவதற்குப் பயன்படுத்தப்படும் மூல ஆவணங்களின் ஒழுங்குவரிசை:
(1) பட்டியல், பொருள் பெறுவனவுக்குறிப்பு, வரவுத்தாள், பட்டியல்
(2) பட்டியல், பொருள் பெறுவனவுக்குறிப்பு, செலவுத்தாள், பட்டியல்
(3) கொடுப்பனவு உறுதிச்சீட்டு, பட்டியல், வரவுத்தாள், பட்டியல்
(4) கொடுப்பனவு உறுதிச்சீட்டு, பட்டியல், செலவுத்தாள், பட்டியல்
(5) கொடுப்பனவு உறுதிச்சீட்டு, பட்டியல், செலவுத்தாள், நாட்குறிப்பிற்கான உறுதிச்சீட்டு (......)

Department of Examinations

**3.** கொடுக்கல் வாங்கல்கள் **1, 2, 3, 4** ஆகியவற்றின் **தேறிய விளைவினைப்** பிரதிபலிக்கும் கணக்கீட்டுச் சமன்பாடு எது?

| | சொத்துக்கள் (ரூ.'000) | = பொறுப்புக்கள் (ரூ.'000) | + உரிமையாண்மை (ரூ.'000) |
|---|---|---|---|
| (1) | + 800 | + 550 | + 250 |
| (2) | + 800 | + 500 | + 300 |
| (3) | + 850 | + 550 | + 300 |
| (4) | + 1 000 | + 700 | + 300 |
| (5) | + 1 000 | + 750 | + 250 |

(……)

**4.** இவ்வணிகமானது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கினைப் பராமரிக்குமாயின் கொடுக்கல்வாங்கல் **5** இனைப் பதிவதற்கான **சரியான** இரட்டைப் பதிவு எது?

| | | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|---|
| (1) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 800 | |
| | விற்பனைக் கணக்கு | | 800 |
| (2) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 864 | |
| | விற்பனைக் கணக்கு | | 864 |
| (3) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 800 | |
| | VAT செலவுக் கணக்கு | 64 | |
| | விற்பனைக் கணக்கு | | 864 |
| (4) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 864 | |
| | விற்பனைக் கணக்கு | | 800 |
| | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | | 64 |
| (5) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 800 | |
| | VAT செலவுக் கணக்கு | 64 | |
| | விற்பனைக் கணக்கு | | 800 |
| | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | | 64 |

(……)

**5.** 31.01.2020 இல் முடிவடையும் மாதத்திற்கான இவ்வணிகத்தின் மொத்த இலாபம் மற்றும் தேறிய இலாபம் எது?

| | மொத்த இலாபம் (ரூ.' 000) | தேறிய இலாபம் (ரூ.' 000) |
|---|---|---|
| (1) | 300 | 230 |
| (2) | 300 | 260 |
| (3) | 300 | 270 |
| (4) | 364 | 294 |
| (5) | 364 | 324 |

(……)

● **6, 7 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

வணிகமொன்றானது தனது அனைத்துக் காசு கொடுக்கல் வாங்கல்களையும் வங்கி நடைமுறைக் கணக்கொன்றினூடாக மேற்கொள்கின்றது. இவ்வணிகத்தின் 2020 பெப்ரவரி மாதத்திற்கான காசுக் கணக்கு மற்றும் வங்கிக் கூற்றுகளின் இறுதி மீதிகளில் எதுவித வேறுபாடுகளும் இருக்கவில்லை. எனினும், 31.03.2020 இலுள்ள காசுக்கணக்கு மீதி ரூ. 500 000 ஆனது அத்திகதியிலுள்ள வங்கிக்கூற்று மீதியுடன் இணங்கவில்லை. மார்ச் மாதத்திற்கான வங்கிக்கூற்றானது 03.04.2020 இல் பெறப்பட்டுள்ளதுடன் அதனைப் பரிசீலிக்கும் போது பின்வருவன வெளிப்பட்டுள்ளன.

A - 29.03.2020 இல் வைப்பிலிடப்பட்ட ரூ. 100 000 காசோலையொன்று இன்னமும் வசூலிக்கப்படவில்லை.

B - நிலையான கட்டளைக்கமையச் செலுத்தப்பட்ட மார்ச் மாதத்திற்கான கடன் தவணைக்கட்டணம் ரூ. 30 000 ஆகும் (இது வட்டிச் செலவு ரூ. 12 000 இனையும் உள்ளடக்கியுள்ளது.)

C - 30.03.2020 இல் வங்கியில் வைப்பிலிடப்பட்ட ரூ. 80 000 காசோலையொன்று 31.03.2020 இல் மறுக்கப்பட்டுள்ளது.

D - முதலீட்டு வருமானம் ரூ. 120 000 ஆனது நேரடியாக வங்கிக்கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

நேரடி வைப்புக்கள், நிலையான கட்டளைக் கொடுப்பனவுகள், மறுக்கப்பட்ட காசோலைகள் என்பன வங்கிக் கூற்று பெறப்பட்டபின் மட்டுமே புத்தகங்களில் பதியப்படுகின்றன.

மேலேயுள்ள 'A', 'C' உருப்படிகளானவை வணிகத்தின் இரண்டு கடன்பட்டோர்களின் நிலுவை மீதிகளைத் தீர்த்துக் கொள்வதற்காக அவர்களிடமிருந்து பெறப்பட்ட காசோலைகளைக் குறிக்கின்றன.

Department of Examinations

**6.** 31.03.2020 இலுள்ளவாறான திருத்திய காசுக்கணக்கு மீதி மற்றும் வங்கிக்கூற்று மீதி:

| | திருத்திய காசுக்கணக்கு மீதி (ரூ.' 000) | வங்கிக்கூற்று மீதி (ரூ.' 000) |
|---|---|---|
| (1) | 410 | 510 |
| (2) | 510 | 410 |
| (3) | 510 | 510 |
| (4) | 590 | 410 |
| (5) | 590 | 510 |

(……)

**7.** 2020 மார்ச் மாதத்திற்கான இலாபத்திலும் 31.03.2020 இலுள்ளவாறான கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியிலும் A, B, C, D உருப்படிகளினால் ஏற்படும் தேறிய விளைவு எது?

| | இலாபத்தில் அதிகரிப்பு (ரூ.' 000) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு மீதியில் அதிகரிப்பு/(குறைவு) (ரூ.' 000) |
|---|---|---|
| (1) | 90 | (100) |
| (2) | 90 | (20) |
| (3) | 108 | (20) |
| (4) | 108 | 80 |
| (5) | 120 | 80 |

(……)

**8.** கணக்கீட்டு எண்ணக்கருக்களின் பிரயோகம் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் எது/எவை **சரியானது /சரியானவை?**

A - கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோரை இனங்காண்பதற்கான அடிப்படையானது அட்டுறு எண்ணக்கருவினால் வழங்கப்படுகிறது.

B - இருப்புக்களை கிரயத்தினதும் தேறிய தேறக்கூடிய பெறுமதியினதும் குறைந்த பெறுமதியில் அளவிடுவதற்கான அடிப்படையானது இணைதல் எண்ணக்கருவினால் வழங்கப்படுகிறது.

C - நிதிநிலைமைக்கூற்றில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை நடைமுறை மற்றும் நடைமுறையல்லாதவையாக வகைப்படுத்துவதற்கான அடிப்படையானது தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவினால் வழங்கப்படுகிறது.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A, B மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம் (……)

**9.** தோற்றத்திலும் பார்க்கக் கருத்து முக்கியம் எனும் எண்ணக்கருவின் பிரயோகத்தினைப் பின்வரும் கணக்கீட்டுச் செயன்முறைகளுள் எது / எவை **பிரதிபலிக்கின்றது / பிரதிபலிக்கின்றன?**

A - நிறுவனமொன்றினால் செலுத்தவேண்டிய வருமான வரியினைப் பொறுப்பொன்றாக இனங்காணல்

B - நிதிக் குத்தகையின் கீழ் பெறப்பட்ட இயந்திரமானது குத்தகை கொள்வோனின் நிதிக் கூற்றுக்களில் சொத்தொன்றாக இனம் காணல்.

C - நிறுவனமொன்றின் உறுதியான கடப்பாடு ஒன்றினை அதன் பொறுப்பாக இனங்காணல்

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம் (……)

**10.** நாதன் ரேடர்ஸ் தமது செயற்பாடுகளை 01.04.2020 இல் ஆரம்பித்துள்ளது. 2020 ஏப்ரல் மாதத்திற்கான பின்வரும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

| மூலப்பதிவேடுகளின் மொத்தம்: | ரூ.' 000 | ஏனைய தகவல்கள்: | ரூ.' 000 |
|---|---|---|---|
| விற்பனை நாளேடு | 220 | விற்பனைக்கிரயம் | 110 |
| கொள்வனவு நாளேடு | 200 | செயற்பாட்டுச் செலவுகள் (கழிவுகள் தவிர) | 60 |
| விற்பனைத் திரும்பல் நாளேடு | 20 | பெற்ற வியாபாரக் கழிவுகள் | 20 |
| கொள்வனவுத் திரும்பல் நாளேடு | 10 | அனுமதித்த வியாபாரக் கழிவுகள் | 8 |
| | | பெற்ற காசுக் கழிவுகள் | 5 |
| | | அனுமதித்த காசுக் கழிவு | 10 |

2020 ஏப்ரல் மாதத்திற்கான இனங்காணப்பட்ட மொத்த வருமானம் மற்றும் மொத்தச் செலவுகள்:

| | மொத்த வருமானம் (ரூ.'000) | மொத்தச் செலவுகள் (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 200 | 170 |
| (2) | 205 | 170 |
| (3) | 205 | 180 |
| (4) | 220 | 180 |
| (5) | 225 | 188 |

(……)

Department of Examinations

**11.** மலரவன் என்பவர் முகக்கவசங்களினை உற்பத்தி செய்வதற்கு 01.04.2020 இல் வணிகமொன்றை ஆரம்பித்தார். இவ்வணிகமானது 31.03.2021 இல் முடிவடையும் வருடத்தில் 12 000 முகக்கவசங்களை உற்பத்திசெய்ய எதிர்பார்க்கிறது. இவ்வருடத்திற்கான பாதிடப்பட்ட உற்பத்தி மேந்தலைக் கிரயங்கள் ரூ. 360 000 ஆகும்.

பின்வரும் உண்மையான கிரயங்கள் 2020 ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்டுள்ளன.

| | |
|---|---|
| துணிக்கான கிரயம் (அலகொன்றிற்கு) | ரூ. 60 |
| நேர்ச் செய்முறைக் கிரயம் (அலகொன்றிற்கு) | ரூ. 20 |
| உற்பத்தி மேந்தலைக் கிரயங்கள் | ரூ. 30 000 |
| உற்பத்தியல்லா மேந்தலைக் கிரயங்கள் | ரூ. 20 000 |

ஏப்ரல் மாதத்தில் 1 000 அலகுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன் 800 அலகுகள் அலகொன்றிற்கு ரூ.150 படி விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2020 ஏப்ரல் மாதத்திற்கான இலாபம் மற்றும் 30.04.2020 இலுள்ளபடி முடிவுப்பொருள் இருப்பின் கிரயம்:

| | மாதத்திற்கான இலாபம் (ரூ.) | இருப்பின் கிரயம் (ரூ.) |
|---|---|---|
| (1) | 6 000 | 16 000 |
| (2) | 6 000 | 22 000 |
| (3) | 12 000 | 16 000 |
| (4) | 12 000 | 22 000 |
| (5) | 16 000 | 26 000 |

(……)

**12.** நிறுவனமொன்று 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபமாக ரூ.150 000 இனை அறிக்கையிட்டுள்ளது. எனினும், அதன்பின்னர் செய்யப்பட்ட பரிசீலனையின்போது பின்வரும் வழுக்களை கணக்கீட்டு புத்தகங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

- 2020 மார்ச் மாதத்திற்கான மொத்தக் கடன் விற்பனைகள் ரூ. 650 000 ஆனது விற்பனைக் கணக்கிலும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிலும் ரூ. 560 000 ஆகப் பதியப்பட்டுள்ளது.
- வியாபாரக் கடன்பட்டோருக்கு அனுமதித்த காசுக் கழிவு ரூ. 20 000 ஆனது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் மாத்திரம் பதியப்பட்டுள்ளது.
- வங்கி வைப்பொன்றிலிருந்து பெறப்பட்ட ரூ. 25 000 வட்டி வருமானமானது வட்டிச் செலவுகள் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது. எனினும் இத்தொகையானது காசுக்கணக்கில் சரியாகப் பதியப்பட்டுள்ளது.
- இவ்வருடத்திற்கான மோட்டார் வாகனங்களின் பெறுமானத்தேய்வான ரூ. 30 000 இற்கு இன்னமும் ஏற்பாடு செய்யப்படவில்லை.

மேற்படி வழுக்களைத் திருத்திய பின்னர், 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான சரியான இலாபம் எது?

(1) ரூ. 165 000 (2) ரூ. 190 000 (3) ரூ. 210 000
(4) ரூ. 215 000 (5) ரூ. 235 000 (……)

**13.** விளையாட்டுக் கழகமொன்றின் 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான தகவல்கள் பின்வருமாறு.

| | ரூ. |
|---|---|
| • இவ்வருடத்திற்காக இனங்காணப்பட்ட சந்தா வருமானம் | 300 000 |
| • இவ்வருடத்தில் பதிவழிக்கப்பட்ட கடந்த வருட நிலுவைச் சந்தா | 50 000 |
| • விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகப் பெறப்பட்ட நன்கொடை (இவற்றுள் ரூ. 100 000 ஆனது 31.03.2020 இல் விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.) | 500 000 |
| • இவ்வருடத்தில் விளையாட்டு மைதான வாடகையின் மிகுதித் தொகை பெறப்பட்டது. (இது தொடர்பில் 30.03.2019 இல் ரூ. 150 000 முற்பணமாகப் பெறப்பட்டது.) | 100 000 |

நன்கொடையில் பயன்படுத்திய தொகையை மாத்திரம் வருடத்துக்கான வருமானமாக இனங்காண்பது விளையாட்டுக் கழகத்தின் கொள்கையாகும்.

மேற்படி உருப்படிகளின் காரணமாக 31.03.2020 இலுள்ளவாறான விளையாட்டுக்கழகத்தின் திரண்ட நிதி மீதியில் ஏற்படும் **அதிகரிப்பு**:

(1) ரூ. 350 000 (2) ரூ. 450 000 (3) ரூ. 500 000
(4) ரூ. 600 000 (5) ரூ. 900 000 (……)

Department of Examinations

**14.** பின்வரும் கூற்றுக்களில் எவை பங்குடமை தொடர்பில் **சரியானவை?**

A - பங்குடமையானது நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றக்கூடாது.
B - பங்காளர்கள் என்ற வகையில் வணிகத்தின் முகாமைக்கு பங்களிப்புச் செய்யும்போது அவர்களுக்குச் செலுத்தப்படும் சம்பளங்கள் பங்குடமையின் செலவுகளாகக் கொள்ளப்படுகின்றன.
C - எழுத்து மூலமான உடன்படிக்கையொன்றில், பங்காளர்கள் தமது மூலதனப் பங்களிப்பு விகிதத்தின் அடிப்படையில் இலாப நட்டங்களைப் பகிர இணங்க முடியும்.
D - பங்குடமையின் உடமையில் மாற்றமொன்று ஏற்படும்போது அதன் நன்மதிப்பானது மதிப்பிடப்படுகின்றது.

(1) B, C மாத்திரம் (2) C, D மாத்திரம் (3) A, B, D மாத்திரம்
(4) A, C, D மாத்திரம் (5) B, C, D மாத்திரம் (……)

● **15, 16 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

மீனா, ராதா ஆகியோரால் நடாத்தப்படும் பங்குடமையின் நிபந்தனைகள் பின்வருமாறு:

- மீனா, ராதா ஆகியோருக்கிடையில் இலாப, நட்டப் பகிர்வு விகிதமானது முறையே 3 : 2 ஆகும்.
- மீனா, ராதா ஆகியோர் வருடாந்தச் சம்பளமாக முறையே ரூ. 450 000, ரூ. 350 000 இற்கு உரித்துடையவர்கள்.

**ஏனைய தகவல்கள்:**

நடைமுறைக் கணக்கின் செலவு மீதிகள்:

| | **31.03.2020 இல் (ரூ.'000)** | **31.03.2019 இல் (ரூ.'000)** |
|---|---|---|
| மீனா | 600 | 250 |
| ராதா | 480 | 200 |

31.03.2020 இல் முடிவடைந்த வருடத்தில் செலுத்திய சம்பளங்கள் மற்றும் பற்றிய சரக்கு:

| | **மீனா (ரூ.'000)** | **ராதா (ரூ.'000)** |
|---|---|---|
| சம்பளங்கள் | 300 | 200 |
| பற்றிய சரக்கு | 100 | 120 |

ராதாவினால் பங்குடமைக்குக் கொடுக்கப்பட்ட கடனுக்காகச் செலுத்த வேண்டிய வருடாந்த வட்டி ரூ. 50 000 ஆனது அவரின் நடைமுறைக்கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

**15.** 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்குடமையின் இலாபம்:
(1) ரூ. 500 000 (2) ரூ. 850 000 (3) ரூ. 1 250 000
(4) ரூ. 1 300 000 (5) ரூ. 1 350 000 (……)

**16.** 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான ராதாவிற்குப் பகிர்வு செய்யப்பட்ட மொத்த இலாபம்:
(1) ரூ. 200 000 (2) ரூ. 250 000 (3) ரூ. 280 000
(4) ரூ. 550 000 (5) ரூ. 600 000 (……)

**17.** பின்வரும் கூற்றுக்களில் எது/எவை LKAS 16 (ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்) இன்படி **சரியானது / சரியானவை?**

A - காலப்பகுதி ஒன்றிற்கான பெறுமானத்தேய்வுத் தொகையானது எப்பொழுதும் இலாப நட்டத்தில் இனங்காணப்படல் வேண்டும்.
B - ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் உருப்படியானது ஆரம்ப இனங்காணலில் கிரயத்தில் அளவிடப்படல் வேண்டும்.
C - நடைமுறை வருடத்தில் சொத்தொன்றை மீள்மதிப்பீடு செய்யும்போது ஏற்படும் மிகையானது, அச்சொத்திற்கு முன்னைய மீள்மதிப்பீட்டுக் குறை இல்லாத நிலையில் ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தில் இனங்காணப்படல் வேண்டும்.

(1) A மாத்திரம் (2) C மாத்திரம் (3) A, B மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம் (……)

**18.** வரையறுத்த அஜித் பொதுக்கம்பனியின் 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களானது 15.06.2020 இல் இயக்குநர்களால் விநியோகிப்பதற்காக அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. பின்வரும் நிகழ்வுகளானது 31.03.2020 இலிருந்து 15.06.2020 காலப்பகுதியில் கம்பனியில் இடம்பெற்றுள்ளன.

A - 31.03.2020 இலுள்ளவாறு ரூ. 5 மில்லியன் கொண்டு செல் தொகையினைக் கொண்டுள்ள இயந்திரமொன்றானது 15.04.2020 இல் இடம்பெற்ற தீ விபத்தின் காரணமாக முற்றாக அழிவடைந்துள்ளது.
B - 31.03.2020 இலுள்ளவாறு ரூ. 800 000 வியாபார கடன்பட்டோரொருவர் 10.05.2020 இல் நீதிமன்றத்தினால் முறிவடைந்துள்ளவராகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார்.
C - 10.06.2020 இல் ரூ. 10 மில்லியன் பங்குகளின் பொது வழங்கலானது செய்யப்பட்டுள்ளது.

LKAS 10 (அறிக்கையிடும் காலத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்) இன்படி 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான கம்பனியின் **சீராக்கம் செய்யமுடியாத நிகழ்வாக / நிகழ்வுகளாக** மேற்கூறியவற்றில் எது / எவை கருதப்படல் வேண்டும்?

(1) A மாத்திரம் (2) C மாத்திரம் (3) A, C மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம் (……)

Department of Examinations

**19.** LKAS 7 (காசுப் பாய்ச்சல் கூற்று) இன்படி பின்வருவனவற்றுள் எது / எவை உற்பத்தி நிறுவனமொன்றின் நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்களாக வகைப்படுத்தப்படல் வேண்டும்?

A - வேறு நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சாதாரண பங்குகளுக்காக பங்குலாபமாகப் பெற்ற காசு

B - வேறு நிறுவனங்களின் தொகுதிக்கடன்களைக் கொள்வனவு செய்வதற்கு செலுத்தப்பட்ட காசு

C - குத்தகைப் பொறுப்பு ஒன்றினைத் தீர்ப்பதற்காகச் செலுத்தப்பட்ட காசு

(1) B மாத்திரம் (2) C மாத்திரம் (3) A, B மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம் (......)

**20.** வரையறுத்த சுகந்தன் பொதுக்கம்பனியானது 01.01.2020 இல் இயந்திரமொன்றை ரூ. 2 500 000 இற்கு உற்பத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்துவதற்காகக் கொள்வனவு செய்துள்ளது. இது தொடர்பில் பின்வரும் கிரயங்களும் கம்பனியில் ஏற்பட்டுள்ளன.

| | **ரூ.'000** |
|---|---|
| இடத்தைத் தயார்படுத்துவதற்கான கிரயம் | 200 |
| நிறுவுதற் கிரயம் | 350 |
| தீக் காப்புறுதிக்கான வருடாந்தக் கட்டணம் | 275 |
| ஆரம்ப இயங்கல் சோதனைக்கான கிரயம் | 250 |

ஆரம்ப இயங்கல் சோதனையின்போது உற்பத்தி செய்யப்பட்ட உருப்படிகளின் விற்பனைகளிலிருந்து பெற்ற தேறிய தொகை ரூ. 50 000 ஆகும்.

LKAS 16 (ஆதனம், பொறி, உபகரணங்கள்) இன்படி இனங்காணலின் போது இந்த இயந்திரத்தின் கிரயம் எது?

(1) ரூ. 3 050 000 (2) ரூ. 3 250 000 (3) ரூ. 3 300 000
(4) ரூ. 3 525 000 (5) ரூ. 3 575 000 (......)

**21.** வரையறுத்த சுகந்தன் பொதுக்கம்பனியானது 01.04.2017 இல் ரூ. 8 000 000 இற்கு இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தது. அதன் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் மற்றும் எஞ்சிய பெறுமதியானது முறையே 8 வருடங்கள் மற்றும் ரூ. 1 600 000 ஆக இருந்தது. அச்சொத்தின் பயன்தரு ஆயுட்காலமும் எஞ்சிய பெறுமதியும் 01.04.2019 இல் மீள் மதிப்பிடப்பட்டது. புதிய மதிப்பீடுகளின்படி மீதியாகவிருக்கும் பயன்தரு ஆயுட்காலமும் எஞ்சிய பெறுமதியும் முறையே 4 வருடங்கள் மற்றும் ரூ. 1 000 000 ஆகும்.

LKAS 16 (ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்) இன்படி 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான இயந்திரத்தின் பெறுமானத்தேய்வு எது?

(1) ரூ. 900 000 (2) ரூ. 1 166 777 (3) ரூ. 1 350 000
(4) ரூ. 1 600 000 (5) ரூ. 1 750 000 (......)

**22.** வரையறுத்த கமல் பொதுக்கம்பனியானது பொருட்களை ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனை செய்கிறது. 01.04.2019 இலுள்ளபடி உத்தரவாதத்திற்கான ஏற்பாடு ரூ. 525 000 ஆகும். 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான 'செலுத்திய உத்தரவாத செலவுகள்' மற்றும் 'இனங்காணப்பட்ட உத்தரவாதச் செலவுகள்' என்பன முறையே ரூ. 375 000 மற்றும் ரூ. 650 000 ஆக இருந்தன.

LKAS 37 (ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்) இன்படி 31.03.2020 இலுள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் இனங்காணப்பட வேண்டிய உத்தரவாதத்திற்கான ஏற்பாடு எது?

(1) ரூ. 150 000 (2) ரூ. 275 000 (3) ரூ. 650 000
(4) ரூ. 800 000 (5) ரூ. 1 175 000 (......)

**23.** வரையறுத்த தமிழினி பொதுக்கம்பனியின் 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம், ஏனைய முற்றுமடங்கிய வருமானம் என்பன முறையே ரூ. 1 500 000, ரூ. 800 000 ஆகும். இவ்வருடத்தில் நிலம் மற்றும் கட்டடத்தினை இரண்டாம் தடவையாக மீள்மதிப்பீடு செய்யும்போது ஏற்பட்ட மிகை ரூ. 800 000 இனை ஏனைய முற்றுமடங்கிய வருமானம் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. நிலம் மற்றும் கட்டடமானது முதல் தடவையாக 31.03.2016 இல் மீள்மதிப்பு செய்யப்பட்டபோது மீள்மதிப்பீட்டுக் குறையாக ரூ. 350 000 ஏற்பட்டிருந்தது.

31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான சரியான இலாபம் மற்றும் மொத்த முற்றுமடங்கிய வருமானம் :

| | **வருடத்திற்கான இலாபம் (ரூ.'000)** | **மொத்த முற்றுமடங்கிய வருமானம் (ரூ.'000)** |
|---|---|---|
| (1) | 1 150 | 1 950 |
| (2) | 1 500 | 1 950 |
| (3) | 1 500 | 2 300 |
| (4) | 1 850 | 1 950 |
| (5) | 1 850 | 2 300 |

(......)

Department of Examinations

● **24, 25 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்காக வரையறுத்த கவிதா பொதுக்கம்பனியினால் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| | **ரூ.' 000** |
|---|---|
| விற்பனைகள் | 7 000 |
| விற்பனைக்கிரயம் | 4 200 |
| 01.04.2019 இல் முடிவுப்பொருள் இருப்பு | 800 |
| 31.03.2020 இல் முடிவுப்பொருள் இருப்பு | 600 |
| செயற்பாட்டுச் செலவுகள் | 1 200 |
| வட்டிச் செலவுகள் | 320 |
| வரிச் செலவு | 400 |

31.03.2020 இலுள்ளபடி வணிகத்தின் உரிமையாண்மையானது ரூ. 4 400 000 ஆக இருந்தன.

**24.** கம்பனியின் இருப்பு புரள்வு விகிதம் மற்றும் வட்டி காப்பு விகிதம் :

| | **இருப்பு புரள்வு விகிதம் (தடவைகள்)** | **வட்டிக்காப்பு விகிதம் (தடவைகள்)** |
|---|---|---|
| (1) | 6 | 4 |
| (2) | 6 | 5 |
| (3) | 6 | 5.6 |
| (4) | 7 | 4 |
| (5) | 7 | 5 |

(......)

**25.** கம்பனியின் உரிமையாண்மை மீதான திரும்பல் விகிதம் மற்றும் மொத்த இலாப விகிதம் :

| | **உரிமையாண்மை மீதான திரும்பல் விகிதம் (%)** | **மொத்த இலாப விகிதம் (%)** |
|---|---|---|
| (1) | 5 | 40 |
| (2) | 5 | 60 |
| (3) | 20 | 40 |
| (4) | 20 | 60 |
| (5) | 20 | 66.67 |

(......)

**26.** பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றினால் உற்பத்தி செய்யப்படும் பொருள் ஒன்றுடன் தொடர்பானவை.

| | **அலகொன்றிற்கான கிரயம் (ரூ.)** |
|---|---|
| மொத்தக்கிரயம் | 250 |
| நேர்க்கிரயம் | 60 |
| உற்பத்தியல்லா மேந்தலைக் கிரயங்கள் | 100 |

நேர்க்கிரயங்கள் எல்லாம் மாறுங் கிரயங்களாகும். மேலும் 50% ஆன உற்பத்தி மேந்தலைக் கிரயங்களும் 25% ஆன உற்பத்தியல்லா மேந்தலைகளும் மாறும் கிரயங்களாகும்.

இவ்வுற்பத்திப் பொருளின் அலகொன்றிற்கான உற்பத்திக் கிரயம் மற்றும் அலகொன்றிற்கான மாறும் கிரயம்:

| | **அலகொன்றிற்கான உற்பத்திக் கிரயம் (ரூ.)** | **அலகொன்றிற்கான மொத்த மாறும் கிரயம் (ரூ.)** |
|---|---|---|
| (1) | 105 | 120 |
| (2) | 105 | 130 |
| (3) | 150 | 105 |
| (4) | 150 | 120 |
| (5) | 150 | 130 |

(......)

Department of Examinations

● **27, 28 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

கம்பனியொன்றானது ஒன்று சேர்த்தல் மற்றும் முடிவுறுத்தல் என்னும் இரண்டு உற்பத்தி கிரய நிலையங்களைக் கொண்டுள்ளது. பின்வரும் தகவல்கள் அந்த கிரய நிலையங்களுடன் தொடர்பானவை.

| | **ஒன்று சேர்த்தல்** | **முடிவுறுத்தல்** |
|---|---|---|
| இயந்திர மணித்தியாலம் ஒன்றுக்கான மேந்தலை உறிஞ்சல் வீதம் (ரூ.) | 7 | 9 |
| இயந்திர மணித்தியாலங்களின் எண்ணிக்கை (பாதிடப்பட்டது) | 5 000 | 4 000 |
| கிலோவாற் மணித்தியாலங்களின் எண்ணிக்கை (பாதிடப்பட்டது) | 300 | 700 |
| இயந்திரக் கிரயம் (ரூ.) | 160 000 | 120 000 |
| தளப்பரப்பு (சதுர மீற்றர்) | 6 000 | 4 000 |

மேலுள்ள மேந்தலை உறிஞ்சல் வீதங்களைக் கணித்த பின்னர், பின்வரும் வழுக்கள் வெளிப்பட்டுள்ளன.

- பாதிடப்பட்ட இயந்திர பெறுமானத்தேய்வான ரூ. 14 000 ஆனது இக்கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.
- பாதிடப்பட்ட மின்சாரக் கட்டணமான ரூ. 10 000 ஆனது கிலோ வாற்ஸ் மணித்தியாலங்களுக்குப் பதிலாகத் தளப்பரப்பு அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

**27.** மேற்படி வழுக்கள் திருத்தப்பட்ட பின்னர், முடிவுறுத்தல் கிரய நிலையத்திற்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த மேந்தலைக் கிரயம் எது?

(1) ரூ. 36 000 (2) ரூ. 40 000 (3) ரூ. 42 000
(4) ரூ. 45 000 (5) ரூ. 49 000 (......)

**28.** மேற்படி வழுக்கள் திருத்தப்பட்ட பின்னர், ஒன்று சேர்த்தல் கிரய நிலையத்திற்கான திருத்திய மேந்தலை உறிஞ்சல் வீதம் எது?

(1) ரூ. 8.00 (2) ரூ. 9.00 (3) ரூ. 9.20 (4) ரூ. 10.00 (5) ரூ. 11.25 (......)

**29.** கிரயம் - தொகை - இலாபப் பகுப்பாய்வு தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் எவை **சரியானவை?**

*(பின்வரும் ஒவ்வொரு நிலைமையுடன் தொடர்புடைய ஏனைய காரணிகள் மாறாதுள்ளது எனக் கருதுக.)*

A - அலகு பங்களிப்பின் குறைவடைதலானது அலகுகளில் கணிக்கப்பட்டுள்ள சமப்பாட்டுப்புள்ளியின் குறைவிற்கு வழிவகுக்கும்.
B - பங்களிப்புக்கு விற்பனை விகிதத்தின் அதிகரிப்பானது பெறுமதியில் கணிக்கப்பட்டுள்ள சமப்பாட்டுப் புள்ளியின் குறைவுக்கு வழிவகுக்கும்.
C - சமப்பாட்டுப் புள்ளிக்கு அப்பால், அலகு பங்களிப்பானது அலகு இலாபத்திற்குச் சமமாகும்.
D - அலகு விற்பனை விலையின் அதிகரிப்பானது சமப்பாட்டுப் புள்ளியின் குறைவிற்கு வழிவகுக்கும்.

(1) B, C மாத்திரம் (2) C, D மாத்திரம் (3) A, B, C மாத்திரம்
(4) B, C, D மாத்திரம் (5) A, B, C, D ஆகிய எல்லாம் (......)

**30.** வரையறுத்த நிமலன் பொதுக்கம்பனியானது உற்பத்தி வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு புதிய இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்ய விரும்புகிறது. இவ்வியந்திரத்தின் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்களாகும். இச்செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயங்களும் நன்மைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

| | **(ரூ.' 000)** |
|---|---|
| புதிய இயந்திரத்தின் கொள்விலை | 1 100 |
| இயந்திர நிறுவுதற் கிரயங்கள் | 200 |
| 5 ஆம் வருட முடிவில் இயந்திரத்தின் எஞ்சிய பெறுமதி | 100 |
| வருடாந்த காசு உட்பாய்ச்சல் | 335 |

செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில் தேவைப்படும் தொழிற்படு மூலதனமானது ரூ. 150 000 ஆக இருப்பதுடன் இதனைச் செயற்றிட்டத்தின் இறுதி வருடத்தில் மீளப்பெற முடியும்.

செயற்றிட்டத்தின் ஆரம்ப காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் இறுதி வருடத்தில் காசு உட்பாய்ச்சல் முறையே:

| | **ஆரம்ப காசு வெளிப்பாய்ச்சல் (ரூ.'000)** | **இறுதி வருடத்தில் காசு உட்பாய்ச்சல் (ரூ.'000)** |
|---|---|---|
| (1) | 1 100 | 250 |
| (2) | 1 100 | 585 |
| (3) | 1 300 | 585 |
| (4) | 1 450 | 250 |
| (5) | 1 450 | 585 |

(......)

Department of Examinations

● 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடையைப் புள்ளிக்கோடுகளின்மீது எழுதுக.

**31.** வணிகமொன்றினால் தயாரிக்கப்படும் பொது நோக்கத்திற்கான நிதிக் கூற்றுக்களின் படி பின்வரும் கூற்றுக்கள் சரியா (T) அல்லது பிழையா (F) எனக் குறிப்பிடுக.

| கூற்று | சரி / பிழை |
|---|---|
| A - இக்கூற்றுக்கள் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியதாகத் தயாரிக்கப்படுகின்றன. | .................. |
| B - இக்கூற்றுக்கள் முக்கியமாக வணிகத்திற்கு வளங்களை வழங்கியவர்களின் பாவனைக்காகக் தயாரிக்கப்படுகின்றன. | .................. |
| C - இக்கூற்றுக்கள் வணிகத்தின் கடந்த காலப்பகுதி ஒன்றுடன் தொடர்பான தகவல்களை வழங்குகிறது. | .................. |
| D - இக்கூற்றுக்கள் வரலாற்று கிரய அடிப்படையில் அளவீடு செய்யப்படும் வணிகத்தின் தகவல்களை மாத்திரம் வழங்குகிறது. | .................. |

**32.** வணிகமொன்றின் கணக்கீட்டுப் பதிவேடுகளிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| | 31.03.2020 இலுள்ளவாறு (ரூ.' 000) | 31.03.2019 இலுள்ளவாறு (ரூ.' 000) |
|---|---|---|
| சொத்துக்கள் | 1 700 | 1 200 |
| பொறுப்புக்கள் | 900 | 700 |

31.03.2020 இல் முடிவடைந்த வருடத்தில் உரிமையாளர் தனது சொந்தப் பணத்திலிருந்து வணிகத்தின் கடன் தவணைக் கட்டணம் ரூ. 120 000 ஐச் செலுத்தியுள்ளார். உரிமையாளர் தனது பிள்ளைகளின் பாடசாலைக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு ஒவ்வொரு வருடமும் வணிகத்திலிருந்து ரூ. 90 000 பெறுகின்றார். இவர் வணிகத்திலிருந்து வேறு எதுவித பணத்தினையும் எடுத்துக் கொள்வதில்லை.

31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வருவன:

(அ) இலாபம் : ரூ. ..........................

(ஆ) நிறுத்தி வைத்த வருவாய் : ரூ. ..........................

**33.** மோட்டார் வாகன வியாபாரக் கம்பனியொன்றின் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் ஒவ்வொன்றையும் பதிவதற்குப் பயன்படுத்தப்படும் மூலப் பதிவேட்டினைக் குறிப்பிடுக.

| கொடுக்கல் வாங்கல் | மூலப்பதிவேடு |
|---|---|
| A - கடனுக்கு மோட்டார் வாகனங்களின் கொள்வனவு | .................................... |
| B - மோட்டார் வாகனங்களை விநியோகத்திற்காகப் பயன்படுத்துவதற்கு கடனிற்குப் பார ஊர்தி கொள்வனவு | .................................... |
| C - கடனிற்கு மோட்டார் வாகனங்கள் விற்பனை | .................................... |
| D - விற்பனைத் தரகுக் கொடுப்பனவு | .................................... |

**34.** பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியில் ஏற்படும் தாக்கத்தினைக் கணிப்பதுடன் அம்மீதியானது **அதிகரிக்குமாயின் (+)** எனவும் அல்லது **குறைவடையுமாயின் (–)** எனவும் அதன் பெறுமதிக்கு எதிரே குறிப்பிடுக.

| கொடுக்கல் வாங்கல் | தாக்கம் (ரூ.' 000) |
|---|---|
| A - 10% வியாபாரக் கழிவுடன் பட்டியல் விலை ரூ. 100 000 ஆன பொருட்களின் கடன் கொள்வனவு | .................... |
| B - 5% காசுக் கழிவுடன் கடன் கொடுத்தோர் ஒருவரின் மீதியான ரூ. 50 000 இனை கொடுத்துத் தீர்ப்பதற்குக் காசுக்கு கொடுப்பனவு | .................... |

**35.** நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது வரலாற்று கிரய எண்ணக்கரு **பின்பற்றப்படாத இரண்டு** சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(1) ........................................................................................................................

(2) ........................................................................................................................

Department of Examinations

**36.** வணிகமொன்றின் 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பின்வரும் **இரண்டு** கொடுக்கல் வாங்கல்களைச் சீராக்குவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளை எழுதுக. (விளம்பல் தேவையில்லை.)

A - ரூ. 180 000 கட்டளையொன்றிற்காக 31.03.2020 இல் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. இக்கட்டளையானது 2020 பெப்ரவரியில் ரூ. 60 000 முற்பணத்துடன் பெறப்பட்டிருந்தது. மிகுதித் தொகையானது இன்னமும் பெறவேண்டியுள்ளது.

B - 01.03.2020 இலிருந்து மூன்று மாதங்களுக்கு விற்பனை மேம்படுத்தல் பிரச்சாரத்தை நடத்துவதற்கு ரூ. 90 000 ஐ செலுத்தி உடன்படிக்கையொன்று செய்யப்பட்டிருந்தது. இது 01.03.2020 இலிருந்து முறையாகச் செயற்படுத்தப்பட்டுள்ளது.

| கொடுக்கல் வாங்கல் | விபரம் | வரவு (ரூ.' 000) | செலவு (ரூ.' 000) |
|---|---|---|---|
| A | | | |
| B | | | |

**37.** பொதுப் பேரேட்டில் வணிகமொன்றினால் பராமரிக்கப்படும் பின்வரும் கணக்குகளிற்கான பொருத்தமான வகைப்படுத்தலைக் குறிப்பிடுக.

| கணக்கு | வகைப்படுத்தல் |
|---|---|
| A - அறவிடமுடியாக் கடன்கள் | ............................................ |
| B - பற்றுக்கள் | ............................................ |
| C - பணிக்கொடைக்கான ஏற்பாடு | ............................................ |
| D - அலுவலக உபகரணங்களின் திரண்ட பெறுமானத்தேய்வு | ............................................ |

**38.** றொசான், ஹசன் என்போர் 'RH அசோசியற்ஸ்' என்னும் பெயரில் எழுத்துமூலமான உடன்படிக்கை எதுவுமின்றி பங்குடமையொன்றை நடாத்துகின்றனர். றொசான், ஹசன் மூலதனமாக முறையே ரூ. 5 000 000, ரூ. 3 000 000 மூலதனமாக முதலிட்டுள்ளனர். மேலும், றொசான் ரூ. 2 000 000 கடனை வணிகத்துக்கு வழங்கியுள்ளார்.
இப்பங்குடமை தொடர்பில் பின்வரும் கூற்றுக்கள் **சரியா (T)** அல்லது **பிழையா (F)** என்பதைக் குறிப்பிடுக.

| | சரி / பிழை |
|---|---|
| A - றொசானும் ஹசனும் மூலதனத்தின் மீது 5% வட்டிக்கு உரித்துடையவர்கள். | ........... |
| B - றொசானால் வழங்கப்பட்ட கடனிற்கு வருடாந்தம் 5% வட்டி செலுத்தப்படல் வேண்டும். | ........... |
| C - றொசான், ஹசன் ஆகியோர் பங்காளர்கள் என்ற வகையில் சம்பளத்திற்கு உரித்துடையவர்கள் அல்லர். | ........... |
| D - றொசான், ஹசன் ஆகியோர் தமது மூலதன விகிதத்தில் இலாபநட்டங்களைப் பகிர்தல் வேண்டும். | ........... |

**39.** பங்குடமையொன்றின் பின்வரும் ஒவ்வொரு இலாபப் பகிர்விற்கும் பங்காளர்கள் உரித்துடையவர்கள் என்பதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.

| பகிர்வுகளின் வகை | காரணம் |
|---|---|
| A - மூலதனத்தின் மீதான வட்டி | .............................................................................. |
| B - பங்காளர்களுக்கான சம்பளங்கள் | .............................................................................. |
| C - இலாபப்பங்கு | .............................................................................. |

**40.** LKAS 8 (கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளின் மீதான மாற்றம் மற்றும் வழுக்கள்) இற்கிணங்க பின்வரும் கூற்றுக்கள் **சரியா (T)** அல்லது **பிழையா (F)** எனக் குறிப்பிடுக.

| கூற்று | சரி / பிழை |
|---|---|
| A - கணக்கீட்டு மதிப்பீடுகளின் மீதான மாற்றங்கள் நிதிக்கூற்றுக்களில் நிகழ்காலத்திலிருந்து முன்னோக்கிய வகையில் சீராக்கம் செய்யப்படல் வேண்டும். | ................ |
| B - கணக்கீட்டுக் கொள்கை மாற்றங்கள் எப்பொழுதும் பின்நோக்கிய வகையில் பிரயோகிக்கப்படுகிறது. | ................ |
| C - சொத்தொன்றின் பெறுமானத்தேய்வு முறையை மாற்றுதல் கணக்கீட்டுக் கொள்கை மாற்றமாகும். | ................ |
| D - சொத்தொன்றின் பயன்தரு ஆயுட்காலத்தினை மாற்றுதல் கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றமாகும். | ................ |

**41.** நிதி அறிக்கையிடலிற்கான எண்ணக்கருக் சட்டகத்திற்கு இணங்க பின்வரும் கூற்றுக்களைப் பூரணப்படுத்துக.

(அ) பொதுநோக்க நிதிக் கூற்றுக்களின் பிரதான பாவனையாளர்கள் ...................................... , ...................................... மற்றும் ...................................... ஆவர்.

(ஆ) நிறுவனத்திற்கு எதிர்கால நன்மைகளைத் தரும் ............................ நிகழ்வுகளின் விளைவாக ஏற்பட்ட நிறுவனத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்ற ................................ ஆனது சொத்தொன்றாக வரையறுக்கப்பட்டுள்ளது.

Department of Examinations

**42.** வரையறுத்த சந்திரன் பொதுக்கம்பனியானது 01.04.2019 இல் இயந்திரமொன்றை பெறுவதற்கு 4 வருடங்களிற்கான நிதிக்குத்தகை உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளது. இத்திகதியில் குத்தகைப் பொறுப்பின் ஆரம்ப அளவீடு ரூ. 1 713 000 ஆக இருந்தது. குத்தகை உடன்படிக்கையின்படி வருடாந்தக் குத்தகை தவணைக் கட்டணம் ரூ. 600 000 ஆகும். முதலாவது தவணைக்கட்டணம் 31.03.2020 இல் செலுத்தப்பட்டது. 31.03.2020, 31.03.2021 வருடங்களில் முடிவடைந்த வருடங்களுக்கான குத்தகை வட்டியானது முறையே ரூ. 257 000 மற்றும் ரூ. 205 500 ஆகும்.

SLFRS 16 (குத்தகைகள்) இன்படி, 31.03.2020 இலுள்ளவாறான நிதிநிலைமைக்கூற்றில் சமர்ப்பிக்கப்படும் குத்தகைப் பொறுப்பு:

(அ) நடைமுறைப் பொறுப்பு : ரூ. ……………………

(ஆ) நடைமுறையல்லாப் பொறுப்பு: ரூ. ……………………

**43.** வரையறுத்த றொசான் பொதுக்கம்பனியின் கணக்குப் பதிவேடுகளிலிருந்து 01.04.2019 இல் உள்ளவாறான பின்வரும் மீதிகள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| | ரூ.' 000 |
|---|---|
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | 1 300 |
| நிறுத்திவைத்த வருவாய்கள் | 1 600 |

கம்பனியானது 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்தில் ரூ. 800 000 நிறுத்திவைத்த வருவாய்களை மூலதனமாக்கியுள்ளதுடன் ரூ. 400 000 இற்கு உரிமைப் பங்கு வழங்கலொன்றையும் மேற்கொண்டது. தற்போதுள்ள பங்குதாரர்களால் அனைத்து உரிமை வழங்கலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் ரூ. 700 000 ஆக இருந்ததுடன் கம்பனி இவ்வருடத்தில் இடைக்காலப் பங்கிலாபமாக ரூ. 300 000 ஐச் செலுத்தியுள்ளது. கம்பனியால் பராமரிக்கப்படும் ஒரேயொரு ஒதுக்கமானது நிறுத்திவைத்த வருவாய் ஆகும்.

31.03.2020 இல் உள்ளவாறு பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் : ரூ. ……………………

(ஆ) நிறுத்திவைத்த வருவாய்கள் : ரூ. ……………………

**44.** வணிகமொன்றின் வருவாயை இனங்காண்பது தொடர்பில் பின்வரும் கூற்றுக்கள் **சரியா (T)** அல்லது **பிழையா (F)** எனக் குறிப்பிடுக.

| **கூற்று** | **சரி / பிழை** |
|---|---|
| A - வணிகமொன்றின் வருவாய் மற்றும் ஏனைய வருமானங்கள் ஆகியன இலாப நட்டத்தில் இனங்காணப்படல் வேண்டும். | ……………… |
| B - வணிகமொன்றின் வருவாய் ஆனது வருமானம் மற்றும் ஆதாயங்களாக வகைப்படுத்தப்படலாம். | ……………… |
| C - வருவாயை இனங்காண்பதற்கான அடிப்படையினை தேறல் எண்ணக்கரு வழங்குகிறது. | ……………… |
| D - வணிகமொன்றின் வருவாய் ஆனது அது உழைக்கப்படும் போது இனம் காணப்படல் வேண்டும் | ……………… |

**45.** கம்பனியொன்றின் 31.03.2020 இலுள்ளவாறான துரித சொத்துக்கள் விகிதமானது 1.1:1 ஆக இருந்தது. கம்பனியின் நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடங்கியுள்ள ஏனைய சொத்துகளுக்கு மேலதிகமாக ரூ. 250 000 இருப்புக்களும் ரூ. 50 000 முற்செலுத்திய செலவுகளும் உள்ளடங்கியுள்ளது. இத்திகதியில் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூ. 500 000 ஆக இருந்தது.

31.03.2020 இல் பின்வருவனவற்றைக் கணிக்குக:

(அ) நடைமுறைச் சொத்துக்கள் : ரூ. …………………………

(ஆ) நடைமுறை விகிதம் : …………………………

**46.** நிறுவனமொன்றினால் தயாரிக்கப்படும் முகாமைக் கணக்கீட்டு அறிக்கைகளுடன் தொடர்பான பின்வரும் கூற்றுக்கள் **சரியா (T)** அல்லது **பிழையா (F)** எனக் குறிப்பிடுக.

| **கூற்று** | **சரி / பிழை** |
|---|---|
| A - இந்த அறிக்கைகள் நிறுவனமொன்றின் அக்கறையுடைய அனைத்து தரப்பினரினதும் பயன்பாட்டுக்குக் கிடைக்கக்கூடியதாக உள்ளன. | ……………… |
| B - இந்த அறிக்கைகள் முகாமைத் தீர்மானமெடுத்தலுக்குத் தேவைப்படும் நிகழ்கால மற்றும் எதிர்காலத் தகவல்களை வழங்குகின்றன. | ……………… |
| C - இந்த அறிக்கைகள் முகாமையாளர்களின் வேண்டுதற்கிணங்க வருடாந்தம் தயாரிக்கப்படுகின்றன. | ……………… |
| D - இந்த அறிக்கைகள் நிறுவனமொன்றின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. | ……………… |

Department of Examinations

**47.** உற்பத்தி வணிகமொன்றின் பின்வரும் செயற்பாடுகள் ஒவ்வொன்றையும் பதிவதற்குப் பயன்படுத்தப்படும் மூல ஆவணத்தைக் குறிப்பிடுக.

| செயற்பாடு | மூல ஆவணம் |
|---|---|
| A - களஞ்சியத்திலிருந்து தொழிற்சாலையால் பொருட்களை வேண்டுதல் செய்தல் | ………………… |
| B - விநியோகத்தர் ஒருவரிடமிருந்து களஞ்சியத்துக்குப் பொருட்களைப் பெறுதல் | ………………… |
| C - தொழிற்சாலை ஊழியர் ஒருவரால் வேலையொன்றிற்காகச் செலவிட்ட நேரத்தைக் கணித்தல் | ………………… |
| D - தொழிற்சாலையில் மின்சாரப் பாவனை | ………………… |

**48.** கம்பனி ஒன்று விசேட வகை மூலப்பொருளொன்றைப் பயன்படுத்திப் பொருளொன்றை உற்பத்தி செய்கின்றது. அலகொன்றை உற்பத்தி செய்வதற்கு 10 கிலோகிராம் மூலப்பொருள் தேவைப்படுகிறது. உற்பத்திப்பொருளின் மாதாந்த உற்பத்தி 50 - 75 அலகுகளுக்கிடையில் மாறுபடுகின்றது. இம்மூலப்பொருளின் மறுகட்டளை தொகை 5 000 கிலோகிராம் ஆகும். இதன் விநியோகக்காலம் 2 இலிருந்து 4 மாதங்களாகும். இம்மூலப்பொருளுக்கான பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

| இருப்பு மட்டம் | தொகை (கிலோகிராம்) |
|---|---|
| A - மறு கட்டளை மட்டம் | …………………………………… |
| B - ஆகக்கூடிய இருப்பு மட்டம் | …………………………………… |

**49.** நலன்புரிச் சங்கமொன்று தொடர்மாடிகளில் வசிக்கும் மக்களுக்காக சூழலைப் பாதுகாத்தல் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்றை ஒழுங்கு செய்கின்றது. ஊடக நிறுவனமொன்று இந்நிகழ்ச்சியில் பங்குபற்றும் ஒவ்வொருவருக்கும் ரூ. 2 000 வீதம் நலன்புரி சங்கத்திற்குச் செலுத்துவதற்கு இணங்கியிருந்தது. பங்குபற்றும் ஒவ்வொருவருக்கும் ரூ. 1 500 வீதம் நலன்புரி சங்கம் செலவை செய்தல் வேண்டும். ஏனைய மதிப்பிடப்பட்ட செலவுகள் கீழே தரப்படுகின்றன.

| | ரூ. |
|---|---|
| மாநாட்டு மண்டபத்துக்கான வாடகைக் கட்டணம் | 45 000 |
| வளவாளர்களுக்கான உணவுச் செலவுகள் | 9 000 |
| விளம்பரச் செலவுகள் | 6 000 |

பின்வருவனவற்றைக் கணிக்குக:

(அ) பங்குபற்றும் ஒருவருக்கான பங்களிப்பு : ரூ. …………………………

(ஆ) நிகழ்ச்சிக்கான நிலையான கிரயம் : ரூ. …………………………

(இ) மொத்தக் கிரயத்தை ஈடுசெய்வதற்குத் தேவைப்படும் பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை : ………………………………

**50.** வரையறுத்த அகரன் பொதுக்கம்பனி அதன் வணிகத்தை விரிவுபடுத்துவதற்கு புதிய இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்ய விரும்புகின்றது. இவ்வியந்திரத்தின் கிரயம் ரூ. 1 700 000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அதன் எதிர்பார்க்கப்படும் பயன்தரு ஆயுட்காலம், எஞ்சிய பெறுமதி என்பன முறையே 5 வருடங்களாகவும், ரூ. 200 000 ஆகும். கம்பனியின் முகாமைக் கணக்காளர் செயற்றிட்டத்தை மதிப்பீடு செய்ததுடன் அதன் திரும்பப் பெறும் காலம் 2 வருடங்கள் 6 மாதங்களாகவும் கணிப்பீடு செய்திருந்தார். இச்செயற்றிட்டத்தின் தேறிய காசுப்பாய்ச்சல் மதிப்பீடுகள் பின்வருமாறு.

| வருடம் | தேறிய காசுப்பாய்ச்சல்கள் (ரூ.) |
|---|---|
| 1 | 600 000 |
| 2 | 750 000 |
| 3 | ? |
| 4 | 450 000 |
| 5 | 425 000 |

**மூன்றாம் வருடத்துக்கான** பின்வருவனவற்றைக் கணிக்குக.

(அ) தேறிய காசுப்பாய்ச்சல் : ரூ. ……………………… (ஆ) இலாபம் : ரூ. ………………………

❊ ❊ ❊

Department of Examinations

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - ஆகஸ்ட் 2020

## கணக்கீடு – I (பழைய பாடத்திட்டம்)

| வினா இல. | சரியான விடை |
|---|---|
| 01. | 4 |
| 02. | 3 |
| 03. | 2 |
| 04. | 4 |
| 05. | 1 |
| 06. | 2 |
| 07. | 4 |
| 08. | All |
| 09. | 4 |
| 10. | 3 |
| 11. | 4 |
| 12. | 2 |
| 13. | 4 |
| 14. | 2 |
| 15. | 4 |
| 16. | 4 |
| 17. | 4 |
| 18. | 3 |
| 19. | 2 |
| 20. | 2 |
| 21. | 3 |
| 22. | 4 |
| 23. | 5 |
| 24. | 2 |
| 25. | 3 |
| 26. | 5 |
| 27. | 4 |
| 28. | 1 |
| 29. | 4 |
| 30. | 5 |

Department of Examinations

(வினாக்கள் 1 – 30 வரை ஒவ்வொரு சரியான விடைக்கும் **04** புள்ளிகள் வீதம் மொத்தம் **120** புள்ளிகள்)

31\. A – T / சரி (01) B – T / சரி (01)
C – T / சரி (01) D – F / பிழை (01)

32\. (அ) ரூ. 270 000 (02) (ஆ) ரூ. 180 000 (02)

33\. A – கொள்வனவு நாளேடு (01)
B – பொதுநாளேடு (01)
C – விற்பனை நாளேடு (01)
D – காசுக்கொடுப்பனவு நாளேடு (01)

34\. A – அதிகரிப்பு / + 90 000 (02)
B – குறைவு / – 50 000 (02)

35\. (1) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மீள்மதிப்பீடு செய்தல்.
(2) சரக்கிருப்பினை கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதியின் குறைவான பெறுமதியில் மதிப்பீடு செய்தல்.
(3) குத்தகைச் சொத்து மற்றும் குத்தகைப் பொறுப்புக்களை எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதியின் அடிப்படையில் பதிதல் (குத்தகைத் தவணைக் கட்டணங்கள்).
(ஏதாவது சரியான விடைக்கு 02 புள்ளிகள் X 2) (04)

36\. A

| | | | |
|---|---|---|---|
| உழைக்கப்படாத வருமானக் க/கு / முற்பணக் க/கு | வரவு | 60 000 | |
| வியாபார வருமதிகள் / கடன்பட்டோர் கட்டுப்பாட்டு க/கு | வரவு | 120 000 | (02) |
| விற்பனைக் க/கு | செலவு | 180 000 | |

B

| | | | |
|---|---|---|---|
| விற்பனை மேம்படுத்தல் செலவுக் க/கு | வரவு | 30 000 | (02) |
| முற்பண விற்பனை மேம்படுத்தல் க/கு | செலவு | 30 000 | |

**அல்லது**

| | | |
|---|---|---|
| முற்பண மேம்படுத்தல் செலவுக் க/கு | வரவு | 60 000 |
| விற்பனை மேம்படுத்தல் செலவுக் க/கு | வரவு | 30 000 |
| காசுக் க/கு | செலவு | 90 000 |

37\. A – செலவு (01)
B – உரிமையாண்மை (01)
C – பொறுப்பு (01)
D – சொத்து (01)

38\. A – F / பிழை (01) B – T / சரி (01)
C – T / சரி (01) D – F / பிழை (01)

Department of Examinations

39. A – மூலதனப் பங்களிப்பு / மூலதனத்துக்கான சந்தர்ப்பக் கிரயம் / மூலதனப் பங்களிப்பு விகிதமானது இலாபங்கள் மற்றும் நட்டங்கள் பகிர்வு விகிதத்திலிருந்து வேறுபட்டதாக இருக்கும் போது (01)
    B – முகாமைக்குப் பங்களிப்பு (01)
    C – இடர்களை ஏற்றல் (02)

40. A – T / சரி (01) B – F / பிழை (01)
    C – F / பிழை (01) D – T / சரி (01)

41. (அ) முதலீட்டாளர்கள், கடன் வழங்கியோர், ஏனைய கடன்கொடுத்தோர் (02)
    (ஆ) கடந்தகால, வளம் (02)

42. (அ) ரூ. 394 500 (02) (ஆ) ரூ. 975 500 (02)

43. (அ) ரூ. 2 500 000 (02) (ஆ) ரூ. 1 200 000 (02)

44. A – F / பிழை (01) B – F / பிழை (01)
    C – T / சரி (01) D – T / சரி (01)

45. (அ) ரூ. 850 000 (02) (ஆ) 1.7 : 1 (02)

46. A – F / பிழை (01) B – T / சரி (01)
    C – F / பிழை (01) D – T / சரி (01)

47. A – பொருட்கள் / களஞ்சிய கோரிக்கை / வேண்டுகைப் பத்திரம் (MRN) / (SRN) (01)
    B – பொருள் பெறுகைப் பத்திரம் (GRN) (01)
    C – வேலை அட்டை / வேலைச்சீட்டு / நேரத்தாள் (01)
    D – மின்மானி வாசிப்பு / மின்சாரப் பட்டியல் (01)

48. A – 3 000 கிலோ கிராம் (02)
    B – 7 000 கிலோ கிராம் (02)

49. (அ) ரூ. 500 (02) (ஆ) ரூ. 60 000 (01)
    (இ) 120 (01)

50. (அ) ரூ. 700 000 (02) (ஆ) ரூ. 400 000 (02)

**(80 புள்ளிகள்)**

| | | | | |
|---|---|---|---|---|
| **வினா இல.** | 1 - 30 | = | 120 | புள்ளிகள் |
| | 31 - 50 | = | 80 | புள்ளிகள் |
| | | | **200** | புள்ளிகள் |

Department of Examinations

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

ගිණුම්කරණය II
கணக்கீடு II
Accounting II

33 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

செய்நிரலாக்கத்தகா (Non - Programmable) கணிப்பான்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.

**அறிவுறுத்தல்கள் :**

- ※ **முதலாம், இரண்டாம்** வினாக்கள் உட்பட **ஆறு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ※ ஒவ்வொரு வினாவுக்கும் **புதிய தாளில்** விடை எழுத ஆரம்பித்தல் வேண்டும்.
- ※ உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.

**1.** வரையறுத்த வேணுகா பொதுக் கம்பனியின் 31.03.2020 இல் உள்ளவாறான சுருக்கிய பரீட்சைமீதியானது கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | வரவு (ரு.'000) | செலவு (ரு.'000) |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கொண்டு செல் தொகை | 49 500 | |
| குத்தகையில் பெறப்பட்ட இயந்திரம் | 12 600 | |
| விற்பனைகள் | | 79 500 |
| விற்பனைக்கிரயம் | 51 300 | |
| வியாபார வருமதிகள் | 5 400 | |
| வியாபாரக் கொடுக்குமதிகள் | | 15 500 |
| 31.03.2020 இல் இருப்புக்கள் | 6 488 | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 1 250 | |
| கோரிக்கைகளுக்கான ஏற்பாடு | | 800 |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | | 25 000 |
| 01.04.2019 இல் காணி மீதான மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 3 500 |
| 01.04.2019 இல் நிறுத்திவைத்த வருவாய்கள் | | 5 650 |
| சென்மதி நிர்வாகச் செலவுகள் | | 300 |
| நிர்வாகச் செலவுகள் | 6 462 | |
| விநியோகக்கிரயம் | 5 600 | |
| நிதிக்கிரயம் | 1 900 | |
| ஏனைய செலவுகள் | 1 500 | |
| குத்தகைப் பொறுப்பு | | 12 600 |
| செலுத்திய வருமானவரி | 1 250 | |
| 01.04.2019 இல் வருமான வரிக்கான ஏற்பாடு | | 400 |
| | **143 250** | **143 250** |

Department of Examinations

**மேலதிக தகவல்கள் :**

31.03.2020 இல் முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கு முன்னர் பின்வருவனவற்றுக்கான சீராக்கங்கள் செய்யப்படல் வேண்டும்.

(i) முதல் - உள் - முதல் - வெளி (FIFO) முறையினைப் பயன்படுத்தி இருப்புக்களின் கிரயத்தை அளவீடு செய்வது கம்பனியின் கொள்கையாகும். எனினும் 31.03.2020 இல் உள்ளவாறான இருப்பின் கிரயமானது தவறுதலாக நிறையிட்ட சராசரிக் கிரய முறையில் அளவீடு செய்யப்பட்டு, அப்பெறுமதியில் கணக்குகளில் பதியப்பட்டுள்ளது. 31.03.2020 இல் முதல் - உள் - முதல் - வெளி (FIFO) முறையில் அளவீடு செய்யப்பட்ட இருப்பின் கிரயம் ரூ. 6 750 000 ஆக இருந்தது.

(ii) இவ்வருடத்திற்கான நிர்வாகச் செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன.

| உருப்படி | ரூ.'000 |
|---|---|
| இயக்குநர் ஊதியம் | 1 250 |
| அலுவலர் சம்பளங்கள் | 2 150 |
| பெறுமானத்தேய்வுச் செலவுகள் | 2 225 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 275 |
| ஏனைய நிர்வாகச் செலவுகள் | 562 |
| மொத்தம் | 6 462 |

(iii) கம்பனியின் விளம்பரக் கட்டணம் ரூ. 350 000 ஆனது இயக்குநர் ஒருவரால் அவரது தனிப்பட்ட வங்கிக் கணக்கிலிருந்து செலுத்தப்பட்டுள்ளது. இத்தொகையானது கம்பனியால் மீளச்செலுத்தப்பட்டிருந்ததுடன் தவறுதலாக இயக்குநர் ஊதியத்தில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

(iv) கம்பனியானது பொருட்களை விற்பனை செய்வதற்கும் விற்பனைக்குப் பின்னர் முதல் 06 மாத காலப்பகுதியில் பராமரிப்புச் சேவையை வழங்குவதற்குமென 01.03.2020 இல் வாடிக்கையாளர் ஒருவருடன் ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தியிருந்தது. இந்த ஒப்பந்தத்தின் மொத்தக் கைம்மாறு ரூ. 1 500 000 ஆகும். இதில் ரூ. 1 000 000 ஆனது பொருள் விற்பனையுடனும் மீதி பராமரிப்புச் சேவைகளிற்கான ஏற்பாட்டுடனும் தொடர்புடையதாகும். கம்பனியானது ஒப்பந்தத்தில் உடன்பட்டபடி எல்லாப் பொருட்களையும் 31.03.2020 இல் விற்பனை செய்துள்ளது. ஒப்பந்தத்தின் மொத்தக் கைம்மாறானது காசாகப் பெறப்பட்டிருந்தது. இத்தொகையானது விற்பனையில் பதியப்பட்டுள்ளது.

(v) பின்வரும் தகவல்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுடன் தொடர்புடையவையாகும். (எல்லாத் தொகைகளும் ரூ.'000 களில் தரப்பட்டுள்ளன.)

| விபரம் | 01.04.2019 இல் கிரயம்/ பெறுமதி | நடைமுறை வருடத்தில் கொள்வனவுகள் | நடைமுறை வருடத்துக்கான பெறுமானத்தேய்வு | 31.03.2020 இல் திரண்ட பெறுமானத்தேய்வு | 31.03.2020 இல் கொண்டு செல் தொகை |
|---|---|---|---|---|---|
| காணி | 22 500 | — | — | — | 22 500 |
| கட்டடங்கள் | 9 500 | 5 000 | 725 | 4 500 | 10 000 |
| மோட்டார் வாகனங்கள் | 9 500 | 6 000 | 1 550 | 3 500 | 12 000 |
| அலுவலக உபகரணங்கள் | 7 500 | — | 1 500 | 2 500 | 5 000 |
| மொத்தம் | 49 000 | 11 000 | 3 775 | 10 500 | 49 500 |

வணிகத்தின் காணியானது முதல் தடவையாக 31.03.2016 இல் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இம்மீள்மதிப்பீட்டிலிருந்தான மிகையானது காணி மீள்மதிப்பு ஒதுக்கத்தினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளது. இக்காணியானது 31.03.2020 இல் இரண்டாவது தடவையாக ரூ. 18 000 000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. எனினும் இதுவரை கணக்குகளில் இது பதியப்படவில்லை.

இவ்வருடத்தில் கட்டடங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் முறையே 01.10.2019 மற்றும் 01.01.2020 திகதிகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும் நடைமுறை வருடத்துக்கான பெறுமானத்தேய்வானது கொள்வனவு செய்யப்பட்ட திகதிகளைக் கருத்திற்கொள்ளாது சொத்துக்களின் வருட இறுதியிலுள்ள கிரயத்தின் அடிப்படையில் தவறாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்குப் பின்வருமாறு நேர்கோட்டு முறையில் வருடாந்தம் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றது.

| | |
|---|---|
| கட்டடங்கள் | 5% |
| மோட்டார் வாகனங்கள் | 10% |
| அலுவலக உபகரணம் | 20% |

மோட்டார் வாகனங்கள் பொருட்களை விநியோகம் செய்வதற்கும் ஏனைய சொத்துக்கள் நிர்வாகச் செயற்பாடுகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

Department of Examinations

(vi) கம்பனிக்கு எதிராக வாடிக்கையாளர் ஒருவரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றின் தீர்ப்பானது 15.05.2020 இல் வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைய கோரிக்கையின் முழுக்கொடுப்பனவாக ரூ. 550 000 மேற்படி திகதியில் செலுத்தப்பட்டது. இவ்வழக்கானது 01.12.2019 இல் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக, கம்பனியின் வழக்கறிஞர்களின் அபிப்பிராயப்படி இனங்காணப்பட்ட ஏற்பாடானது 31.03.2020 இல் உள்ளவாறான பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ளது. 15.06.2020 இல் இயக்குநர் சபையினால் கம்பனியின் நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

(vii) கம்பனியானது 01.03.2020 இல் இயந்திரமொன்றை 4 வருடங்களிற்குப் பெற்றுக் கொள்வதற்கு நிதிக் குத்தகை உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளது. எனினும் இயந்திரத்தை நவீனமயப்படுத்துவதற்காக ரூ. 500 000 செலவு செய்யப்பட்ட பின்னர் 31.03.2020 இலிருந்து இயந்திரம் பயன்பாட்டுக்குத் தயாராக இருந்தது. இந்நவீனமயப்படுத்தலானது குத்தகைக்காலம் முழுவதும் கம்பனிக்கு நன்மையை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் இத்தொகையானது ஏனைய நிர்வாகச் செலவுகளுள் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. குத்தகை வட்டியானது நவீனமயப்படுத்தற் காலத்தில் விதிக்கப்படவில்லை. இந்த உடன்படிக்கையின்படி, வருடாந்தக் குத்தகைத் தவணைக்கட்டணம் ரூ. 4 413 000 ஆனது 31.03.2021 இலிருந்து செலுத்தல் வேண்டும். 31.03.2021 இல் முடிவடையும் வருடத்துக்கான குத்தகை வட்டியானது ரூ. 1 890 000 ஆகும்.

(viii) நடைமுறை வருடத்தில் செலுத்திய வருமான வரியானது கடந்த வருடத்துக்காகச் செலுத்திய ரூ. 520 000 ஐயும் உள்ளடக்கியுள்ளது. 31.03.2020 இல் முடிவடையும் வருடத்துக்கான மொத்த வருமான வரிப்பொறுப்பானது ரூ. 650 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது:**

LKAS 1 (நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்) இன்படி பிரசுரிப்பதற்குத் தேவையான வரையறுத்த வேணுகா பொதுக்கம்பனியின் பின்வரும் நிதிக்கூற்றுக்கள் (குறிப்புக்கள் உட்பட):

(1) 31.03.2020 இல் முடிவடையும் வருடத்துக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்று

(2) 31.03.2020 இல் முடிவடையும் வருடத்துக்கான உரிமையாண்மை மாற்றங்களுக்கான கூற்று

(3) 31.03.2020 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று **(மொத்தம் 20 புள்ளிகள்)**

Department of Examinations

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை – 2020

## கணக்கீடு – II (பழைய பாடத்திட்டம்)

### வினா இல. - 1.

(1)

**வரையறுத்த வேணுகா பொதுக்கம்பனி** (01)

**31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்று**

| | குறிப்பு | (ரூ.'000) | |
|---|---|---|---|
| விற்பனைகள் | | 79 000 | (01) |
| (–) விற்பனைக்கிரயம் | | (51 038) | (02) செய்கை 1 |
| மொத்த இலாபம் | (01) | 27 962 | |
| விநியோகக் கிரயங்கள் | | (5 500) | (02) செய்கை 2 |
| நிர்வாகச் செலவுகள் | | (5 487) | (03) செய்கை 3 |
| ஏனைய செலவுகள் | | (2 250) | (03) செய்கை 4 |
| நிதிக் கிரயம் | | (1 900) | |
| வரிக்கு முன் இலாபம் | 01 | 12 825 | |
| வருமானவரிச் செலவு | 02 | (770) | (02) |
| வருடத்திற்கான இலாபம் | (01) | 12 055 | |
| **ஏனைய முற்றுமடங்கிய வருமானம்** | | | |
| காணி மீள்மதிப்பு மிகையில் மாற்றம் | | (3 500) | (01) |
| மொத்த முற்றுமடங்கிய வருமானம் | (01) | 8 555 | |

**குறிப்பு 01 :**

**பின்வரும் செலவுகள் கழித்தபின் வருடத்துக்கான இலாபம் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது**

| | (ரூ. '000) |
|---|---|
| பெறுமானத் தேய்வு | 3 200 |
| இயக்குநர் ஊதியம் | 900 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 275 |
| வாடிக்கையாளர் இழப்பீட்டுக்கான கோரிக்கை | 550 |
| நிதிக்கிரயம் | 1 900 |

(ஏதேனும் உருப்படி ஒன்றுக்கு **01** புள்ளி X 2) (02)

**குறிப்பு 02 : வருமானவரி** (ரூ. '000)

| | | |
|---|---|---|
| நடைமுறை வருடத்திற்கான ஏற்பாடு | 650 | 01 |
| முன்னைய வருட குறை ஏற்பாடு | 120 | 01 |
| மொத்தம் | 770 | |

**(20 புள்ளிகள்)**

Department of Examinations

**செய்கைகள் :** (ரூ. 000)

**செய்கை 1) விற்பனைக் கிரயம்**

| | | | |
|---|---|---|---|
| விற்பனைக்கிரயம் | | | 51 300 |
| FIFO அடிப்படையில் இருப்பு | (6 750) 01 | | |
| நிறையிட்ட அடிப்படையில் இருப்பு | 6 488 01 | (262) | |
| **மொத்தம்** | | | **51 038** |

**செய்கை 2) விநியோகக் கிரயம்**

| | | | |
|---|---|---|---|
| மீதி | | | 5 600 |
| விளம்பரச் செலவுகள் | | | 350 01 |
| மோட்டார் வாகன பெறுமானத் தேய்வு மீளப்பெறல் | (1 550) | | |
| திருத்திய மோட்டார் வாகனப் பெறுமானத் தேய்வு | 1 100 | | (450) 01 |
| **மொத்தம்** | | | **5 500** |

**செய்கை 3) நிர்வாகச் செலவுகள்**

| | | | |
|---|---|---|---|
| மீதி | | 6 462 | |
| இயக்குநர் ஊதியக் குறைப்பு | | (350) | 01 |
| குத்தகையின் நேர்க்கிரயம் | | (500) | 01 |
| கட்டட பெறுமானத் தேய்வு மீளப்பெறல் | (725) | | |
| திருத்திய கட்டட பெறுமானத் தேய்வு | 600 | (125) | 01 |
| **மொத்தம்** | | **5 487** | |

**செய்கை 4) ஏனைய செலவுகள்**

| | | | |
|---|---|---|---|
| மீதி | | 1 500 | |
| கோரிக்கை ஏற்பாட்டை மீளப்பெறல் | (800) 01 | | |
| புதிய கோரிக்கை | 550 01 | (250) | |
| மீள்மதிப்பீட்டுக் குறை | | 1 000 | 01 |
| **மொத்தம்** | | **2 250** | |

(மேற்படி செய்கைகள் கணக்குகளாகவும் சமர்ப்பிக்கப்படலாம்).

2) **வரையறுத்த வேணுகா பொதுக்கம்பனி**

**31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று (ரூ.'000)**

| விபரம் | கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | நிறுத்தி வைத்த வருவாய்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01.04.2019 இல் மீதி | 25 000 | 3 500 | 5 650 | 34 150 |
| மொத்த முற்றுமடங்கிய வருமானம் | | (01) 3 500 | (01) 12 055 | 8 555 |
| **31.03.2020 இல் மீதி** | **25 000** | **0** | **17 705** | **42 705** |

**(02 புள்ளிகள்)**

(3) **வரையறுத்த வேணுகா பொதுக்கம்பனி** (01)

**31.03.2019 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று**

| | குறிப்பு | (ரூ.'000) | |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | | |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | 03 | (01) 58 675 | |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | | |
| இருப்புக்கள் | | 6 750 | (01) |
| வியாபார வருமதிகள் | | 5 400 | |
| மீளப்பெற வேண்டிய வருமானவரி | 04 | 80 | (01) |
| காசும் காசுக்கு சமமானவையும் | | 1 250 | |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **72 155** | |
| **உரிமையாண்மை :** | | | |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | | 25 000 | |
| **ஒதுக்கங்கள் :** | | | |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | | (01) 17 705 | |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் :** | | | |
| குத்தகைப் பொறுப்பு | | 10 077 | (01) |
| **நடைமுறைப் பொறுப்புக்கள் :** | | | |
| வியாபார கொடுக்குமதிகள் | | 15 500 | |
| குத்தகைப் பொறுப்பு | | 2 523 | (01) |
| உழைக்கப்படாத வருவாய்கள் | | 500 | (01) |
| ஏனைய கொடுக்குமதிகள் | 05 | 850 | (02) |
| **மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | **72 155** | |

Department of Examinations

**குறிப்பு 03 : ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (ரூ. '000)**

| கிரயம் / பெறுமதி | காணி | கட்டடங்கள் | பொறி இயந்திரம் | மோட்டார் வாகனங்கள் | அலுவலக உபகரணங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 01.04.2019 இல் மீதி | 22 500 | 9 500 | ---- | 9 500 | 7 500 | 49 000 |
| சேர்ப்புக்கள் / மீள்மதிப்பீடுகள் | | 5 000 (01) | 13 100 * | (02) 6 000 | (01) | 24 100 |
| அகற்றல்கள் / மீள் மதிப்பீட்டுக் குறை | (4 500) | (01) | | | | (4 500) |
| 31.03.2020 இல் மீதி | 18 000 | 14 500 | 13 100 | 15 500 | 7 500 | 68 600 |
| **திரண்ட பெறுமானத் தேய்வு** | | | | | | |
| 01.04.2019 இல் மீதி | | (01) 3 775 | ---- | 1 950 | 1 000 | 6 725 |
| இவ்வருடத்திற்கான பெறுமானத்தேய்வு | | (02) 600 | ---- | 1 100 | 1 500 | 3 200 |
| 31.03.2020 இல் மீதி | | 4 375 | ---- | 3 050 | 2 500 | 9 925 |
| **31.03.2020 இல் கொண்டு செல் தொகை** | **18 000** | **10 125** | **13 100** | **12 450** | **5 000** | **58 675** |

* 12 600 [01] புள்ளி

**குறிப்பு 04 : மீளப்பெற வேண்டிய வருமானவரி (ரூ.'000)**

| | |
|---|---|
| வருடத்தில் செலுத்திய வருமானவரி | 1 250 |
| ஆரம்ப மீதி / 01.04.2019 இல் மீதி | (400) |
| நடைமுறை வருடத்திற்கான வருமானவரி ஏற்பாடு | [01] (770) |
| **மொத்தம்** | **80** |

**குறிப்பு 05 : ஏனைய கொடுக்குமதிகள் (ரூ.'000)**

| | |
|---|---|
| கோரிக்கைகளுக்கான ஏற்பாடு | 550 [01] |
| சென்மதி நிர்வாகச் செலவுகள் | 300 [01] |
| **மொத்தம்** | **850** |

**(18 புள்ளிகள்)**
**(மொத்தம் 40 புள்ளிகள்)**

**வினா இல. - 1**

| (1) | (2) | (3) | மொத்தம் |
|---|---|---|---|
| 20 | 02 | 18 | **40** |

Department of Examinations

2. (அ) நந்து மற்றும் முத்து என்போர் பின்வரும் நிபந்தனைகளுக்கமையப் பங்குடமை ஒன்றை நடாத்தி வருகின்றனர்.

- நந்துவும் முத்தும் இலாபம் அல்லது நட்டங்களை முறையே 2:1 என்றவாறு பகிர்வர்.
- ஒவ்வொரு பங்காளரும் மாதாந்தச் சம்பளம் ரூ. 50 000 இற்கு உரித்துடையவர்.
- ஒவ்வொரு பங்காளரும் வருட ஆரம்பத்திலுள்ள மூலதன மீதியின் மீது வருடமொன்றுக்கு 10% வட்டியைப் பெற உரித்துடையவர்.
- பங்குடமையின் நன்மதிப்பானது பங்காளர் மூலதனக் கணக்குகளினூடாகச் சீராக்கம் செய்யப்படும்.
- நன்மதிப்புச் சீராக்கம் தவிர்ந்த பங்காளர்களுடனான ஏனைய எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் அவர்களது நடைமுறைக் கணக்கினூடாகப் பதியப்படும்.

31.03.2020 இல் உள்ளவாறான பங்குடமையின் பரீட்சை மீதி பின்வருமாறு:

| விபரம் | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| மூலதனக் கணக்கு: | | |
| நந்து | | 2 000 |
| முத்து | | 1 000 |
| நடைமுறைக் கணக்குகள்: | | |
| நந்து | | 400 |
| முத்து | | 200 |
| 01.04.2019 இல் 5% கடன் கணக்கு - றிஸ்வான் | | 800 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (31.03.2020 இல் கொண்டு செல் தொகை) | 4 100 | |
| விற்பனைகள் | | 6 000 |
| விற்பனைக்கிரயம் | 1 850 | |
| செயற்பாட்டுச் செலவுகள் | 2 600 | |
| 31.03.2020 இல் இருப்பு | 700 | |
| கடன் மீள்கொடுப்பனவு - றிஸ்வான் | 420 | |
| பற்றுக்கள் (காசு) - நந்து | 500 | |
| கையிலுள்ள காசு | 3 230 | |
| கங்காவால் கொண்டுவரப்பட்ட காசு | | 3 000 |
| | **13 400** | **13 400** |

**மேலதிக தகவல்கள்:**

(i) 31.03.2020 இல் உள்ளவாறான இருப்பானது பௌதீக கணக்கிடல் அடிப்படையில் அளவீடு செய்யப்பட்டது.

(ii) இவ்வருடத்தில் நந்து, முத்து ஆகியோரால் எடுத்துக்கொள்ளப்பட்ட பொருட்கள் முறையே ரூ. 60 000, ரூ. 40 000 ஆகும். இவை இதுவரை புத்தகங்களில் பதிவு செய்யப்படவில்லை.

(iii) பரீட்சை மீதியில் காணப்படும் றிஸ்வானின் கடன் மீள்கொடுப்பனவு மீதியானது 30.09.2019 வரை செலுத்தப்பட்ட கடன் வட்டியையும் அத்திகதியில் 50% ஆன கடனைத் தீர்ப்பதற்காகச் செலுத்திய காசையும் கொண்டுள்ளது. மிகுதியாகவுள்ள கடன் மீதியின் மீது செலுத்தவேண்டிய வட்டியானது இதுவரை பதியப்படவில்லை.

(iv) 31.03.2020 இல் முடிவடையும் வருடத்திற்கான பங்குடமையின் வியாபார அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்தற்காக ரூ. 10 000 ஐ நந்து தனது சொந்தப் பணத்திலிருந்து செலுத்தியிருந்தார். இது இதுவரை பதிவு செய்யப்படவில்லை.

(v) 31.03.2020 இல் முடிவடையும் வருடத்துக்கான வாகனங்களுக்கான காப்புறுதிக் கட்டணமாக ரூ. 140 000 ஐப் பங்குடமை செலுத்தியிருந்தது. இது பங்குடமையின் செயற்பாட்டுச் செலவுகளில் பதியப்பட்டுள்ளது. எனினும் இக்கொடுப்பனவானது முத்துவின் தனிப்பட்ட வாகனத்துக்காகச் செலுத்திய காப்புறுதிக் கட்டணம் ரூ. 40 000 ஐயும் உள்ளடக்கியிருப்பது பின்னர் தெரியவந்துள்ளது.

(vi) 31.03.2020 இல் கங்கா ஒரு புதிய பங்காளராக அனுமதிக்கப்பட்டார். இத்திகதியில் கங்கா மூலதனத்துக்கும் நன்மதிப்புக்குமான தனது பங்களிப்பாக ரூ. 3 000 000 இனை பங்குடமைக்குக் கொண்டு வந்துள்ளார். நந்து, முத்து மற்றும் கங்கா ஆகியோருக்கிடையிலான புதிய இலாப நட்டப் பகிர்வு விகிதமானது முறையே 5:3:2 என ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத்திகதியில் பங்குடமையின் நன்மதிப்பானது ரூ. 1 500 000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டது.

**வேண்டப்படுவது:**

(1) 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்துக்கான பங்குடமையின் வருமானக் கூற்று (பங்காளரிடையே மேற்கொள்ளப்பட்ட பகிர்வுகள் உட்பட)

(2) 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்துக்கான பங்காளரின் மூலதனக் கணக்குகள் மற்றும் நடைமுறைக் கணக்குகள் **(10 புள்ளிகள்)**

Department of Examinations

(ஆ) தினேஷ் கம்பனியானது 'A' , 'B' என்னும் இரு வகையான பொருட்களை உற்பத்தி செய்கின்றது. இக்கம்பனியின் தொழிற்சாலையானது ஒன்றுசேர்த்தல் மற்றும் முடிவுறுத்தல் ஆகிய இரண்டு உற்பத்தித் திணைக்களங்களையும் சேவைத் திணைக்களமான களஞ்சியத்தையும் கொண்டுள்ளது. இம்மூன்று திணைக்களங்களும் ஒரே இடத்திலேயே அமைந்துள்ளன. மேலும், கம்பனியானது தனியான கட்டடத்தில் அமைந்துள்ள நிர்வாகத் திணைக்களமொன்றையும் கொண்டுள்ளது. 5 000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் அடுத்த நிதிவருடத்திற்கான பாதீடு செய்யப்பட்ட மேந்தலைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | மொத்தம் (ரூ.'000) | தொழிற்சாலை (ரூ.'000) | நிர்வாகத் திணைக்களம் (ரூ.'000) |
|---|---|---|---|
| நேரில் கூலிகள் | 750 | 700 | 50 |
| உற்பத்தி முகாமையாளர் சம்பளம் | 900 | 900 | – |
| கட்டட வாடகை | ? | 960 | ? |
| இயந்திரப் பெறுமானத்தேய்வு | 800 | 800 | – |
| அலுவலக உபகரணங்களின் பெறுமானத்தேய்வு | 30 | – | 30 |
| மின்சாரக் கட்டணங்கள் | 400 | ? | ? |
| ஏனைய உற்பத்தி மேந்தலைக் கிரயங்கள் | 290 | 290 | – |

**மேலதிக தகவல்கள்:**

(i) மேந்தலைப் பகிர்வு அடிப்படைகள் பின்வருமாறு:

| விபரம் | ஒன்றுசேர்த்தல் | முடிவுறுத்தல் | களஞ்சியம் |
|---|---|---|---|
| தளப்பரப்பு (சதுரமீற்றர்) | 24 000 | 16 000 | 8 000 |
| கிலோவாற் மணித்தியாலங்கள் | 2 000 | 1 000 | 500 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 20 | 12 | 3 |
| இயந்திரக்கிரயம் (ரூ.) | 3 000 000 | 2 000 000 | – |

(ii) தொழிற்சாலையானது ஒன்றுசேர்த்தல் திணைக்களத்தில் இருவரும் முடிவுறுத்தல் திணைக்களத்தில் ஒருவருமாக மூன்று உற்பத்தி முகாமையாளர்களை ஈடுபடுத்தியுள்ளது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதாந்தச் சம்பளமாக ரூ. 25 000 செலுத்தப்படுகின்றது.

(iii) கம்பனியானது நிர்வாகத் திணைக்களம் அமைந்துள்ள கட்டடத்துக்கு மாதாந்த வாடகையாக ரூ. 10 000 ஐச் செலுத்துவதுடன் இதன் வருடாந்த மின்சாரப் பாவனையானது 500 கிலோவாற் மணித்தியாலங்களாகும்.

(iv) ஒன்றுசேர்த்தல், முடிவுறுத்தல் மற்றும் களஞ்சியத் திணைக்களங்களின் ஏனைய உற்பத்தி மேந்தலைக் கிரயங்கள் முறையே ரூ. 190 000, ரூ. 70 000, ரூ. 30 000 ஆகும்.

(v) களஞ்சியத்தின் மொத்த மேந்தலைக் கிரயங்கள் இரண்டு உற்பத்தித் திணைக்களங்களுக்கும் இடையே சமமாக மீள்பகிர்வு செய்யப்படுகின்றது.

(vi) உற்பத்தித் திணைக்களங்களின் மேந்தலைக் கிரயங்கள் இயந்திர மணித்தியாலங்களின் அடிப்படையில் உறிஞ்சப்படுகின்றன. ஒன்றுசேர்த்தல் மற்றும் முடிவுறுத்தல் திணைக்களங்களுக்கான மதிப்பிடப்பட்ட வருடாந்த இயந்திர மணித்தியாலங்கள் முறையே 50 000 மற்றும் 60 000 ஆகும்.

**வேண்டப்படுவது:**

(1) பகிர்வு அடிப்படைகளைத் தெளிவாகக் காட்டக்கூடியவாறு மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை

(2) ஒன்றுசேர்த்தல் மற்றும் முடிவுறுத்தல் திணைக்களங்களின் மேந்தலை உறிஞ்சல் வீதங்கள்

(3) மொத்த நிர்வாக மேந்தலைக் கிரயங்கள்

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

Department of Examinations

## வினா இல. – 2

(அ) (1)

**நந்து மற்றும் முத்து பங்குடமை**
**31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக்கூற்று**

**(ரூ. '000)**

| விபரம் | | ரூ. '000 | புள்ளி |
|---|---|---|---|
| விற்பனைகள் | | 6 000 | |
| (–) விற்பனைக் கிரயம் | | (1 750) | (01) |
| மொத்த இலாபம் | | 4 250 | |
| **கழி : செலவுகள்** | | | |
| ரிஸ்வான் கடன் வட்டி | | (30) | (02) (செய்கை 1) |
| வியாபார அனுமதிப்பத்திரச் செலவு | | (10) | (01) |
| செயற்பாட்டுச் செலவுகள் | | (2 560) | (01) |
| தேறிய இலாபம் | | 1 650 | |
| (–) பகிர்வுகள் | | | |
| மூலதன வட்டி நந்து | 200 (01) | | |
| முத்து | 100 (01) | (300) | |
| பங்காளர் சம்பளம் நந்து | 600 | | |
| முத்து | 600 | (1 200) | (01) |
| இலாபம் நந்து | (01) 100 | | |
| கங்கா | (01) 50 | 150 | |
| | | -- | **(10 புள்ளிகள்)** |

**செய்கை 1 : கடன்வட்டி**

01.04.2019 – 30.09.2019 – $(800 \times 5\% \times {}^{6}/_{12})$ = ரூ. 20 [01]

01.10.2019 – 31.03.2020 – $(800 \times 5\% \times {}^{6}/_{12})$ = ரூ. 10 [01]

**ரூ. 30**

(2) **பங்காளர் மூலதனக் கணக்குகள் (ரூ. '000)**

| விபரம் | நந்து | முத்து | கங்கா | விபரம் | நந்து | முத்து | கங்கா |
|---|---|---|---|---|---|---|---|
| நன்மதிப்பு | 750 | 450 (01) | 300 | மீ.கீ.கொ.வ. | 2 000 | 1 000 | ---- |
| | | | | காசு | | | 3 000 (01) |
| மீ.கீ.கொ.செ. | 2 250 | 1 050 | 2700 | நன்மதிப்பு | 1 000 | (01) 500 | |
| | 3 000 | 1 500 | 3 000 | | 3 000 | 1 500 | 3 000 |

**(03 புள்ளிகள்)**

**பங்காளர் நடைமுறைக் கணக்குகள் (ரூ. '000)**

| விபரம் | நந்து | முத்து | விபரம் | நந்து | முத்து |
|---|---|---|---|---|---|
| பொருள் பற்று | 60 | 40 (01) | மீ.கீ.கொ.வ. | 400 | 200 |
| வாகனக் காப்புறுதி | 500 | (01) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 10 (01) | |
| காசுப் பற்றுக்கள் | | 40 (01) | மூலதன வட்டி (01) | 200 | 100 |
| மீ.கீ.கொ.செ. | 750 | 870 | சம்பளம் (01) | 600 | 600 |
| | | | இலாபப் பகிர்வு (01) | 100 | 50 |
| | 1 310 | 950 | | 1 310 | 950 |

**(07 புள்ளிகள்)**

**(20 புள்ளிகள்)**

Department of Examinations

(ஆ) (1) **மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை** (ரூ. '000)

| விபரம் | பகிர்வின் அடிப்படை | மொத்தம் | உற்பத்தித் திணைக்களம் | | சேவைத் திணைக்களம் |
|---|---|---|---|---|---|
| | | | ஒன்று சேர்த்தல் | முடிவுறுத்தல் | களஞ்சியம் |
| நேரில்கூலி | ஊழியர் எண்ணிக்கை / (01) 20 : 12 : 3 | 700 | 400 | 240 | 60 (01) |
| உற்பத்தி முகாமையாளர் சம்பளம் | உற்பத்தி முகாமையாளர்கள் எண்ணிக்கை / 2 : 1 (01) | 900 | 600 | 300 (01) | --- |
| கட்டட வாடகை | தளப்பரப்பு / 3 : 2 : 1 (01) | 960 | 480 | 320 | 160 (01) |
| இயந்திர பெறுமானத் தேய்வு | இயந்திரக் கிரயம் / 3 : 2 (01) | 800 | 480 | 320 (01) | --- |
| மின்கட்டணம் | கிலோவாற்று மணித்தியாலம் (01) / 4 : 2 : 1 | 350 | 200 | 100 | 50 (01) |
| ஏனைய உற்பத்தி மேந்தலைக்கிரயம் | நேரடி ஒதுக்கீடு (01) | 290 | 190 | 70 | 30 (01) |
| | | **4 000** | **2 350** | **1 350** | **300** |
| களஞ்சியம் மேந்தலை மீள்பகிர்வு | சமமாக | --- | (01) 150 | (01) 150 | (300) |
| **மொத்த உற்பத்தி மேந்தலைகள்** | | **4 000** | **2 500** | **1 500** | --- |

**(14 புள்ளிகள்)**

(2) மேந்தலை உறிஞ்சல் வீதம் **ஒன்றுசேர்த்தல்** **முடிவுறுத்தல்**

**ரூ. 50** (02) **ரூ. 25** (02)

**செய்கை : (ரூ. '000)**

| | ஒன்றுசேர்த்தல் | முடிவுறுத்தல் |
|---|---|---|
| மொத்த உற்பத்தி மேந்தலை | (01) 2 500 | (01) 1 500 |
| இயந்திர மணித்தியாலங்கள் | 50 (01) | 60 (01) |
| மேந்தலை உறிஞ்சல் வீதம் | ரூ. 50 | ரூ. 25 |

**(04 புள்ளிகள்)**

(3) மொத்த நிர்வாக மேந்தலைக்கிரயம் (ரூ. '000) = **ரூ. 250** (02)

**செய்கை :** **(ரூ. '000)**

| | |
|---|---|
| நேரில் கூலிகள் | 50 |
| கட்டட வாடகை | 120 * |
| அலுவலக உபகரண பெறுமானத் தேய்வு | 30 * |
| மின்சாரக் கட்டணங்கள் | 50 * |
| **மொத்தம்** | **250** |

* (ஏதேனும் **இரண்டு** விடயங்களுக்கு **02** புள்ளிகள்) **(02 புள்ளிகள்)**

**(20 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

**வினா இல. – 2**

| **பகுதி** | **1** | **2** | **3** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| (அ) | 10 | 10 | --- | **20** |
| (ஆ) | 14 | 04 | 02 | **20** |
| | | | | **40** |

Department of Examinations

3. 'நாதன் ஓட்டோ கெயா' ஆனது தனியுடமை நிறுவனமொன்றாகும். இவ்வணிகமானது தனிநபர் மற்றும் நிறுவன வாடிக்கையாளர்களுக்கு வாகனப் பராமரிப்புச் சேவைகளை வழங்குகின்றது. இவ்வணிகத்தின் 01.01.2020 இல் உள்ளவாறான ஆரம்ப மீதிகள் பின்வருமாறு.

| சொத்துக்கள் | ரூ.'000 |
|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 900 |
| இருப்பு (பராமரிப்புப் பொருட்கள்) | 160 |
| வியாபார வருமதிகள் | 130 |
| முற்செலுத்திய வாடகை | 240 |
| ஊழியர்களுக்கு முற்பணமாகச் செலுத்திய சம்பளம் | 34 |
| வங்கியிலுள்ள காசு | 100 |

| பொறுப்புக்களும் உரிமையாண்மையும் | ரூ.'000 |
|---|---|
| நீண்டகாலக் கடன் | 400 |
| வியாபாரக் கொடுக்குமதிகள் | 90 |
| செலுத்தவேண்டிய மின்சாரம் | 12 |
| நிறுவன வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட முற்பணம் | 10 |
| உரிமையாண்மை | 1 052 |

வணிகத்தின் அனைத்துக் காசுக் கொடுக்கல் வாங்கல்களும் வங்கி நடைமுறைக் கணக்கொன்றினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் 2020 ஜனவரி மாதத்தில் வணிகத்தில் மேற்கொள்ளப்பட்டன.

(i) வாகனம் கழுவும் பொறியொன்று ரூ. 360 000 க்குக் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இக்கடன்தொகையானது 01.01.2022 இலிருந்து ஆரம்பித்து மூன்று வருடத்தினுள் செலுத்துதல் வேண்டும்.

(ii) ரூ. 130 000 கிரயமான பராமரிப்புப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், இது தொடர்பில் ரூ. 60 000 காசு செலுத்தப்பட்டது. மீதித்தொகையானது இரண்டு மாதங்களில் செலுத்தப்பட வேண்டும்.

(iii) தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு ரூ. 140 000 காசுக்குப் பராமரிப்புச் சேவைகள் வழங்கப்பட்டன. இது தொடர்பில் பயன்படுத்தப்பட்ட பராமரிப்புப் பொருட்களின் கிரயமானது ரூ. 86 000 ஆகும்.

(iv) உரிமையாளரின் ஆயுள் காப்புறுதிக் கட்டணம் ரூ. 12 000 ஆனது வணிகத்தால் செலுத்தப்பட்டது.

(v) ரூ. 5 000 கழிவொன்று அனுமதிக்கப்பட்ட பின்னர் கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து ரூ. 45 000 க்கான காசோலை ஒன்று பெறப்பட்டது.

(vi) நிறுவன வாடிக்கையாளர் ஒருவருக்கு ரூ. 50 000 க்கான பராமரிப்புச் சேவைகள் வழங்கப்பட்டிருந்தன. 01.01.2020 இல் உள்ளவாறான நிறுவன வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து முற்பணமாகப் பெறப்பட்ட மீதியானது இக்கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடையதாகவிருப்பதுடன் மீதித்தொகை ரூ. 40 000 ஆனது சேவை வழங்கப்பட்ட பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்டது. இச்சேவைக்காக ரூ. 30 000 கிரயமான பராமரிப்புப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டன.

(vii) வயோதிபர் இல்லமொன்றின் வாகனமொன்றுக்கான பராமரிப்புச் சேவையானது இலவசமாக வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் ரூ. 6 000 கிரயமான பராமரிப்புப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டன.

(viii) வணிகத்தின் மாதாந்தத் தீக்காப்புறுதிக் கட்டணம் ரூ. 4 000 ஆனது உரிமையாளரால் அவரது தனிப்பட்ட பணத்திலிருந்து செலுத்தப்பட்டது.

(ix) ரூ.400 000 நீண்டகாலக் கடனுக்கான கடன் தவணைக்கட்டணம் ரூ. 67 000 ஆனது செலுத்தப்பட்டது. இது ரூ. 17 000 வட்டியை உள்ளடக்கியுள்ளது.

(x) நிறுவன வாடிக்கையாளர்களுக்குக் கடனடிப்படையில் ரூ. 300 000 க்கான பராமரிப்புச் சேவைகள் வழங்கப்பட்டன. இத்தொகைக்கு 2% வியாபாரக் கழிவு அனுமதிக்கப்பட்டுள்ளது. இச் சேவைகளுக்கு ரூ. 154 000 கிரயமான பராமரிப்புப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டன.

(xi) ஊழியர்களின் மாதாந்தச் சம்பளம் ரூ. 84 000 ஆகும். 01.01.2020 இல் உள்ளவாறான சம்பள முற்பணங்களைக் கழித்த பின்னர் மீதித் தொகையானது செலுத்தப்பட்டிருந்தது.

(xii) 01.01.2020 இல் உள்ளவாறு செலுத்தவேண்டிய மின்சாரக் கொடுப்பனவு செலுத்தப்பட்டது. ஜனவரி மாதத்திற்கான ரூ. 11 000 மின்சாரச் சிட்டையொன்று பெறப்பட்டது. இது இன்னமும் செலுத்தப்படவில்லை.

(xiii) ரூ. 8 000 கிரயமான பராமரிப்புப் பொருட்கள் பழுதடைந்திருந்துடன் இவை ரூ. 3 000 காசுக்கு விற்பனை செய்யப்பட்டன.

(xiv) முன்னைய மாத காலத்தில் பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்த வியாபார வருமதியாளர் ஒருவரின் மீதிக்காக ரூ. 14 000 பெறப்பட்டது.

(xv) வியாபார நிலையத்தின் மாதாந்த வாடகை ரூ. 20 000 ஆகும். 01.01.2020இல் உள்ளவாறான முற்செலுத்திய வாடகையானது 2020 ஆம் ஆங்கில வருடத்திற்காகச் செலுத்திய வாடகையைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

**வேண்டப்படுவது:**

கணக்கீட்டுச் சமன்பாட்டைப் பயன்படுத்தி 01.01.2020 இல் உள்ளவாறான மீதிகளைப் பதிவு செய்வதுடன் (i) தொடக்கம் (xv) வரையான கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தைக் (பெறுமதிகளுடன்) காட்டுக. ஒவ்வொரு பெறுமதியும் அதிகரிக்குமாயின் (+) எனவும் குறைவடையுமாயின் (–) எனவும் அந்தந்தப் பெறுமதிகளுக்கு எதிரே குறிப்பிடவும் (இவ்வினாவுக்கு விடையளிப்பதற்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்துக.)

(ரூ.'000)

| | சொத்துக்கள் | | | | | பொறுப்புக்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | இருப்புக்கள் | வியாபார வருமதிகள் | முற்பணக் கொடுப்பனவுகளும் முற்செலுத்தியவைகளும் | காசு | நீண்டகாலக் கடன்கள் | வியாபாரச் சென்மதிகள் | ஏனைய சென்மதிகள் | முற்பணமாகப் பெற்றவை | உரிமையாண்மை |
| ஆரம்ப மீதி | | | | | | | | | | |
| கொடுக்கல் வாங்கல்கள் | | | | | | | | | | |
| (i) | | | | | | | | | | |
| (ii) | | | | | | | | | | |
| ...... | | | | | | | | | | |
| ...... | | | | | | | | | | |
| இறுதி மீதி | | | | | | | | | | |

(மொத்தம் 15 புள்ளிகள்)

Department of Examinations

## வினா இல. – 3

(1) (ரூ. '000)

| இல. | சொத்துக்கள் | | | | | பொறுப்புக்கள் | | | | உரிமையாண்மை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | இருப்புக்கள் | வியாபார வருமதிகள் | முற்பணக் கொடுப்பனவு களும் முற்செலுத்திய வைகளும் | காசு | நீண்டகாலக் கடன்கள் | வியாபாரச் சென்மதிகள் | ஏனைய சென்மதிகள் | முற்பணமாகப் பெற்றவை | உரிமையாண்மை | |
| மீதி | 900 | 160 | 130 | 274 | 100 | 400 | 90 | 12 | 10 | 1 052 | (02)* |
| (i) | + 360 | | | | | + 360 | | | | | (01) |
| (ii) | | + 130 | | | – 60 | | + 70 | | | | (02) |
| (iii) | | – 86 | | | + 140 | | | | | + 54 | (02) |
| (iv) | | | | | – 12 | | | | | – 12 | (01) |
| (v) | | | – 50 | | + 45 | | | | | – 5 | (02) |
| (vi) | | – 30 | | | + 40 | | | | – 10 | + 20 | (03) |
| (vii) | | – 6 | | | | | | | | – 6 | (01) |
| (viii) | | | | | | | | | | + 4<br>– 4 | (01) |
| (ix) | | | | | – 67 | – 50 | | | | – 17 | (02) |
| (x) | | – 154 | + 294 | | | | | | | + 140 | (02) |
| (xi) | | | | – 34 | – 50 | | | | | – 84 | (02) |
| (xii) | | | | | – 12 | | | – 12<br>+ 11 | | – 11 | (01)<br>(01) |
| (xiii) | | – 8 | | | + 3 | | | | | – 5 | (02) |
| (xiv) | | | | | + 14 | | | | | + 14 | (01) |
| (xv) | | | | – 20 | | | | | | – 20 | (01) |
| இறுதி மீதி (03) | **1 260** ** | **6** | **374** | **220** | **141** | **710** | **160** | **11** | **0** | **1 120** | |

* (ஏதேனும் **இரண்டு** ஆரம்ப மீதிகளுக்கு 01 புள்ளி – 10 மீதிகளுக்கு ஆகக் கூடியது **02** புள்ளிகள்)

** (ஏதேனும் **இரண்டு** இறுதி மீதிகளுக்கு 01 புள்ளி – 10 மீதிகளுக்கு ஆகக் கூடியது **03** புள்ளிகள்)

**(30 புள்ளிகள்)**
**(மொத்தம் 30 புள்ளிகள்)**

**வினா இல. – 3**

| மொத்தம் |
|---|
| **30** |

Department of Examinations

**4.** வரையறுத்த குமுது பொதுக்கம்பனியானது வியாபாரக் கம்பனியாகும். இக்கம்பனியானது பொருட்களைத் தனியே கடன் அடிப்படையில் மாத்திரம் கொள்வனவு செய்வதுடன் விற்பனையானது காசுக்கும் கடனுக்கும் செய்யப்படுகின்றது. பின்வரும் தகவல்கள் 31.03.2020 இல் முடிவடையும் மாதத்திற்கான வியாபாரத்தின் கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் பேரேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

*31.03.2020 இலுள்ளபடி கடன்பட்டோர் பேரேடு (ரூ.'000)*

| விபரம் | நந்தன் ரேடர்ஸ் | கணேஷ் ரேடர்ஸ் | நாதன் ரேடர்ஸ் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஆரம்ப மீதி | 100 | 50 | 150 | 300 |
| விற்பனைகள் | – | 300 | 450 | 750 |
| காசுப் பெறுவனவுகள் | (75) | (50) | (500) | (625) |
| கொடுத்த கழிவுகள் | (5) | – | (10) | (15) |
| **இறுதிமீதி** | **20** | **300** | **90** | **410** |

*31.03.2020 இலுள்ளபடி கடன்கொடுத்தோர் பேரேடு (ரூ.'000) :*

| விபரம் | சுதன் ரேடர்ஸ் | அமலன் ரேடர்ஸ் | மகேஷ் ரேடர்ஸ் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஆரம்ப மீதி | 300 | – | 150 | 450 |
| கொள்வனவுகள் | 500 | 400 | 200 | 1 100 |
| காசுக் கொடுப்பனவுகள் | (290) | (200) | (150) | (640) |
| பெற்ற கழிவுகள் | (10) | – | – | (10) |
| **இறுதி மீதி** | **500** | **200** | **200** | **900** |

01.03.2020 இலுள்ளவாறான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பட்டியல்களின் மொத்தங்கள் இத்திகதியில் அந்தந்த கட்டுப்பாட்டுக்கணக்கு மீதிகளுடன் இணங்கியுள்ளன.

01.03.2020 இலுள்ளபடியான காசுக் கணக்கு மீதியானது ரூ. 50 000 ஆகும். கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பேரேடுகளில் உள்ளடங்கியுள்ள காசுக் கொடுக்கல் வாங்கல்களுக்கு மேலதிகமாகப் பின்வரும் காசுக் கொடுக்கல் வாங்கல்களும் 2020 மார்ச் மாதத்தில் இடம்பெற்றுள்ளன.

- கம்பனியின் காசு விற்பனை ரூ. 900 000 ஆக இருந்தது.
- ஊழியர் சேமலாப நிதி (EPF) க்கு ஊழியர்களின் பங்களிப்பாக ரூ. 48 000 கழித்து சம்பளமாக ரூ. 552 000 செலுத்தப்பட்டது.
- 2020 பெப்ரவரி மாதத்திற்கான EPF ரூ. 120 000 வும் ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) ரூ. 18 000 வும் செலுத்தப்பட்டுள்ளது.
- ஏனைய செலவுகளுக்காக ரூ. 250 000 செலுத்தப்பட்டுள்ளது.

ஊழியர், தொழில்தருநர் ஆகியோரின் EPF இற்கான பங்களிப்பானது முறையே 8%, 12% ஆகும். மேலும் தொழில்தருநர் ETF இற்கு 3% பங்களிப்பு செய்கின்றார். EPF மற்றும் ETF இரண்டிற்குமான பங்களிப்பானது ஊழியரின் மொத்தச் சம்பளத்தின் அடிப்படையில் கணிக்கப்படுகிறது. கம்பனியானது குறிப்பிட்ட மாதமொன்றிற்கான EPF மற்றும் ETF என்பவற்றை தொடர்ந்து வரும் மாதத்தின் 5 ஆம் நாளில் செலுத்துகிறது.

*(கொடுக்கல் வாங்கல்களின் திகதிகளைப் புறக்கணிக்குக.)*

**வேண்டப்படுவது:**

(1) 31.03.2020 இல் முடிவடைந்த மாதத்திற்கான பின்வரும் மூலப்பதிவேடுகள்:

(i) கொள்வனவு நாளேடு

(ii) விற்பனை நாளேடு

(iii) காசுப் பெறுவனவுகள் நாளேடு

(iv) காசுக் கொடுப்பனவுகள் நாளேடு

(2) 31.03.2020 இல் முடிவடைந்த மாதத்திற்கான பின்வரும் கணக்குகள்:

(i) காசுக் கணக்கு

(ii) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு

(iii) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக்கணக்கு

(iv) சம்பளக் கட்டுப்பாட்டுக்கணக்கு

(v) சென்மதி ஊழியர் நம்பிக்கை நிதி (EPF) கணக்கு

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

Department of Examinations

## வினா இல. – 4

(1) (i)

**கொள்வனவு நாளேடு (ரூ. '000)**

| திகதி | விபரம் | தொகை | |
|---|---|---|---|
| | சுதன் ரேடர்ஸ் | 500 | 01 |
| | அமலன் ரேடர்ஸ் | 400 | 01 |
| | மகேஸ் ரேடர்ஸ் | 200 | 01 |
| | **மொத்தம்** | **1 100** | 01 |

**(04 புள்ளிகள்)**

(ii)

**விற்பனை நாளேடு (ரூ. '000)**

| திகதி | விபரம் | தொகை | |
|---|---|---|---|
| | நந்தன் ரேடர்ஸ் | 300 | 01 |
| | நாதன் ரேடர்ஸ் | 450 | 01 |
| | **மொத்தம்** | **750** | 01 |

**(03 புள்ளிகள்)**

(iii)

**காசுப் பெறுவனவு நாளேடு (ரூ. '000)**

| திகதி | விபரம் | கழிவு | தொகை | பகுப்பாய்வு | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | விற்பனை | வியாபாரக் கடன்பட்டோர் | |
| | நந்தன் ரேடர்ஸ் | 5 * | 75 | | 75 * | |
| | கணேஸ் ரேடர்ஸ் | | 50 | | 50 * | |
| | நாதன் ரேடர்ஸ் | 10 * | 500 | | 500 * | |
| | காசுக்கு விற்பனை | | 972 | 900 * | | |
| | **மொத்தம்** | **15** | **1 597** | **900** | **625** | 03 * |

* (தொகை நிரல் உருப்படிகள் மற்றும் மொத்தங்கள் தவிர ஏதேனும் **இரண்டு** சரியான உருப்படிக்கு **01** புள்ளி – ஆறு உருப்படிகளுக்கு ஆகக்கூடியது **03** புள்ளிகள்)

**(03 புள்ளிகள்)**

(iv)

**காசுக் கொடுப்பனவு நாளேடு (ரூ. '000)**

| திகதி | விபரம் | கழிவு | தொகை | பகுப்பாய்வு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | வியாபார கடன் கொடுத்தோர் | செலவுகள் | ஏனைய கொடுப்பனவு | |
| | சுதன் ரேடர்ஸ் | 10 * | 290 | 290 * | | | |
| | அமலன் ரேடர்ஸ் | | 200 | 200 * | | | |
| | மகேஸ் ரேடர்ஸ் | | 150 | 150 * | | | |
| | ஊழியர் சம்பளம் | | 552 | | 552 * | | |
| | EPF கொடுப்பனவு | | 120 | | | 120 * | |
| | ETF கொடுப்பனவு | | 18 | | | 18 * | |
| | ஏனைய செலவுகள் | | 250 | | 250 * | | |
| | **மொத்தம்** | **10** | **1 580** | **640** | **802** | **138** | 04 * |

* (தொகை நிரல் உருப்படிகள் மற்றும் மொத்தங்கள் தவிர ஏதேனும் **இரண்டு** சரியான உருப்படிக்கு **01** புள்ளி – எட்டு உருப்படிகளுக்கு ஆகக்கூடியது **04** புள்ளிகள்)

**(04 புள்ளிகள்)**
**(14 புள்ளிகள்)**

Department of Examinations

(2) (i) **காசுக் க/கு (ரூ. '000)**

| | | | |
|---|---|---|---|
| மீதி வ. | 50 | வியாபார க.கொ. கட்டுப்பாட்டு க/கு | 640 * |
| காசு விற்பனை | 900 * | சம்பள கட்டுப்பாட்டு க/கு | 552 * |
| வியாபார க.ப. கட்டுப்பாட்டு க/கு | 625 * | EPF சென்மதிகள் | 120 * |
| மீ.கீ.கொ.செ. | 5 | ETF சென்மதிகள் | 18 * |
| | | ஏனைய செலவுகள் | 250 * |
| | **1 580** | | **1 580** (04)* |

* (மீதிகள் தவிர ஏதேனும் **இரண்டு** சரியான உருப்படிகளுக்கு **01** புள்ளி – **ஏழு** உருப்படிகளுக்கு ஆகக்கூடியது **04** புள்ளிகள்)

**(04 புள்ளிகள்)**

(ii) **வியாபாரக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் க/கு (ரூ. '000)**

| | | | |
|---|---|---|---|
| மீ.கீ.கொ.வ. | 300 | காசு க/கு | 625 * |
| விற்பனை | 750 * | அனுமதித்த கழிவு | 15 * |
| | | மீ.கீ.கொ.செ. | 410 |
| | **1 050** | | **1 050** (03)* |

* (மீதிகள் தவிர ஏதாவது சரியான உருப்படியொன்றிற்கு **01** புள்ளி – ஆகக்கூடியது **03** புள்ளிகள்)

**(03 புள்ளிகள்)**

(iii) **வியாபாரக் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் க/கு (ரூ. '000)**

| | | | |
|---|---|---|---|
| காசு க/கு | 640 * | மீ.கீ.கொ.வ. | 450 |
| பெற்ற கழிவு | 10 * | கொள்வனவு | 1 100 * |
| மீ.கீ.கொ.செ. | 900 | | |
| | **1 550** | | **1 550** (03)* |

* (மீதிகள் தவிர ஏதாவது சரியான உருப்படியொன்றிற்கு **01** புள்ளி – ஆகக்கூடியது **03** புள்ளிகள்)

**(03 புள்ளிகள்)**

(iv) **சம்பளக் கட்டுப்பாட்டுக் க/கு (ரூ. '000)**

| | | | |
|---|---|---|---|
| சென்மதி ஊழியர் சேமலாப நிதிக் க/கு | 48 * | ஊழியர் சம்பள க/கு | 600 * |
| காசுக் க/கு | 552 * | | |
| | **600** | | **600** (03)* |

* (சரியான உருப்படியொன்றிற்கு **01** புள்ளி – ஆகக்கூடியது **03** புள்ளிகள்)

**(03 புள்ளிகள்)**

Department of Examinations

(v) **சென்மதி ஊழியர் நம்பிக்கை நிதிக் க/கு (ரூ. '000)**

| | | | |
|---|---|---|---|
| காசுக் க/கு | 18 (01) | மீ.கீ.கொ.வ. | 18 |
| மீ.செ. | 18 (01) | ஊழியர் நம்பிக்கை நிதிச் செலவுக் க/கு | 18 (01) |
| | **36** | | **36** |

**அல்லது**

**சென்மதி ஊழியர் சேமலாப நிதிக் க/கு (ரூ. '000)**

| | | | |
|---|---|---|---|
| காசுக் க/கு | 120 * | மீ.கீ.கொ.வ. | 120 |
| மீ.செ. | 120 | சம்பளக் கட்டுப்பாட்டுக் க/கு | 48 * |
| | | ஊழியர் சேமலாப நிதிச் செலவுக் க/கு | 72 * |
| | **240** | | **240** (03)* |

* (மீதிகள் தவிர ஏதாவது சரியான உருப்படியொன்றிற்கு 01 புள்ளி – ஆகக்கூடியது 03 புள்ளிகள்)

**(03 புள்ளிகள்)**
**(16 புள்ளிகள்)**
**(மொத்தம் 30 புள்ளிகள்)**

**வினா இல. – 4**

| பகுதி | (i) | (ii) | (iii) | (iv) | (v) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| (1) | 04 | 03 | 03 | 04 | --- | 14 |
| (2) | 04 | 03 | 03 | 03 | 03 | 16 |
| | | | | | | **30** |

5. (அ) பின்வரும் தகவல்கள் 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான மூன்று மோட்டார் வாகனத் கைத்தொழில் கம்பனிகள் தொடர்பானவை.

| விகிதம் | வரையறுத்த அமலா பொதுக்கம்பனி | வரையறுத்த விமலா பொதுக்கம்பனி | வரையறுத்த கமலா பொதுக்கம்பனி |
|---|---|---|---|
| நடைமுறை | 1.2 : 1 | 2.8 : 1 | 2.5 : 1 |
| விரைவுச் சொத்து | 0.96 : 1 | 2.5 : 1 | 2 : 1 |
| சரக்கிருப்புப் புரள்வு (தடவைகள்) | 9.5 | 8.3 | 6.2 |
| கடன்பட்டோர் புரள்வு (தடவைகள்) | 4.1 | 4.5 | 3.8 |
| உரிமையாண்மைக்குக் கடன் | 65% | 80% | 60% |
| மொத்தச் சொத்துக்கள் மீதான வருவாய் | 9% | 12% | 14% |

**வேண்டப்படுவது:**
பின்வரும் ஒவ்வொரு நிலைமைகளுக்குமான அடிப்படையினை வழங்கும் பொருத்தமான கம்பனியினை இனங் கண்டு அதற்கான விகிதத்தினையும் குறிப்பிடுக.

(1) அதிகூடிய இணைப்பினைக் கொண்ட கம்பனி
(2) சரக்கிருப்பினை மிகவும் வினைத்திறனான முறையில் பயன்படுத்துவதனைக் காட்டும் கம்பனி
(3) அதிகூடிய திரவத்தன்மை கொண்ட கம்பனி
(4) முதலீட்டின் மீது அதிகூடிய வருவாயை உருவாக்கும் கம்பனி
(5) வாடிக்கையாளர்களிடமிருந்து காசினை மிகவும் வினைத்திறனான முறையில் சேகரிப்பதைக் காட்டும் கம்பனி

(05 புள்ளிகள்)

Department of Examinations

(ஆ) வரையறுத்த ஆதவன் பொதுக்கம்பனியின் 31.03.2020 மற்றும் 31.03.2019 இலுள்ளவாறான சுருக்கிய நிதி நிலைமைக்கூற்றுக்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

| விபரம் | 31.03.2020 இல் (ரூ.'000) | 31.03.2019 இல் (ரூ.'000) |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - (கொண்டுசெல் தொகை) | 35 500 | 30 100 |
| சரக்கிருப்பு | 9 750 | 7 250 |
| வியாபார வருமதிகள் | 8 500 | 10 750 |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 2 500 | 1 500 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **56 250** | **49 600** |
| கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள் | 28 000 | 20 000 |
| மீள்மதிப்பு ஒதுக்கம் | 3 000 | 2 000 |
| நிறுத்திவைத்த வருவாய்கள் | 6 500 | 2 200 |
| குத்தகைக் கடன்கொடுத்தோர் | 12 500 | 16 500 |
| வியாபாரக் கொடுக்குமதிகள் | 4 350 | 7 400 |
| வருமான வரிக்கான ஏற்பாடு | 500 | 600 |
| வங்கி மேலதிகப்பற்று | 1 400 | 900 |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | **56 250** | **49 600** |

31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான மேலதிக தகவல்கள்:

(i) கம்பனியானது இவ்வருடத்தில் இடைக்காலப் பங்கிலாபமாக ரூ. 1 200 000 ஐச் செலுத்தியுள்ளதுடன் ரூ. 2 000 000 நிறுத்திவைத்த வருவாய்களை மூலதனமாக்கியும் உள்ளது. மேலும், கம்பனியானது 100 000 சாதாரண பங்குகளைப் பொதுமக்களுக்கு வழங்கியிருந்ததுடன் அவற்றுக்கான முழுக் கைமாறினையும் பெற்றிருந்தது.

(ii) இவ்வருடத்திற்கான பெறுமானத்தேய்வு மற்றும் வருமான வரிச் செலவு முறையே ரூ. 2 100 000 மற்றும் ரூ. 1 160 000 ஆக இருந்தது.

(iii) கம்பனியானது இவ்வருடத்தில் தனது காணியை முதற்தடவையாக மிகையில் மீள் மதிப்பீடு செய்துள்ளது. இவ்வருடத்தில் வேறு ஏதேனும் மீள் மதிப்பீடுகள் இடம்பெறவில்லை.

(iv) கம்பனியானது 01.10.2019 இல் இயந்திரமொன்றை ரூ. 400 000 ஆதாயத்தில் அகற்றியுள்ளது. இவ்வியந்திரமானது 01.04.2017 இல் ரூ. 3 000 000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் இதற்கு வருடாந்தம் 20% இல் நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு இடப்பட்டுமிருந்தது. மேலும், புதிய வாகனமொன்றானது இவ்வருடத்தில் காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:**

LKAS 7 (காசுப் பாய்ச்சல் கூற்று) இன்படி வரையறுத்த ஆதவன் பொதுக்கம்பனியின் 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்துக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

(10 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

Department of Examinations

## வினா இல. – 5

| (அ) கம்பனி | விகிதம் |
|---|---|
| (1) விமலா PLC (01) | உரிமையாண்மைக்கு கடன் விகிதம் (01) |
| (2) அமலா PLC (01) | இருப்பு புரள்வு விகிதம் (01) |
| (3) விமலா PLC (01) | விரைவுச் சொத்து விகிதம் / நடைமுறை விகிதம் (01) |
| (4) கமலா PLC (01) | மொத்தச் சொத்துக்கள் மீதான வருவாய் விகிதம் (01) |
| (5) விமலா PLC (01) | கடன்பட்டோர் புரள்வு விகிதம் (01) |

**(10 புள்ளிகள்)**

(ஆ)

## ஆதவன் PLC இன்
## 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப்பாய்ச்சல்கூற்று

| | (ரூ. '000) | |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | | |
| வரிக்கு முன் இலாபம் | 8 660 | (02) (செய்கை 1) |
| *சீராக்கங்கள் :* | | |
| பெறுமானத் தேய்வு | 2 100 | (01) |
| மோட்டார் வாகன அகற்றல் ஆதாயம் | (400) | (01) |
| | 10 360 | |
| *தொழிற்படு மூலதனத்தில் மாற்றங்கள்* | | |
| இருப்பில் அதிகரிப்பு | (2 500) | (01) |
| வியாபார வருமதிகளில் குறைவு | 2 250 | (01) |
| வியாபார கொடுக்குமதிகளில் குறைவு | (3 050) | (01) |
| செயற்பாட்டில் உருவான காசு | 7 060 | |
| செலுத்திய வரி | (1 260) | (01) (செய்கை 2) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் உருவான தேறிய காசுப்பாய்ச்சல்** (01) | **5 800** | |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | | |
| மோட்டார் வாகனக் கொள்வனவு | (8 000) | (02) (செய்கை 3) |
| மோட்டார் வாகன அகற்றல் மூலம் பெற்ற காசு | 1 900 | (02) (செய்கை 4) |
| **முதலீட்டு நடவடிக்கையில் பயன்படுத்திய தேறிய காசுப்பாய்ச்சல்** (01) | **(6 100)** | |
| **நிதியிடல் நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | | |
| செலுத்திய இடைக்காலப் பங்குலாபம் | (1 200) | (01) |
| பங்கு வழங்கல் மூலம் பெற்ற காசு | 6 000 | (01) (செய்கை 5) |
| குத்தகைத் தவணைக்கட்டணம் செலுத்தியது | (4 000) | (01) |
| **நிதியிடல் நடவடிக்கைகள் மூலம் உருவான தேறிய காசுப்பாய்ச்சல்** (01) | 800 | |
| வருடத்தில் காசும் காசுக்கு சமனானவற்றில் தேறிய அதிகரிப்பு | 500 | |
| 01.04.2019 இல் காசும் காசுக்குச் சமனானவையும் | 600 | (01) |
| 31.03.2020 இல் காசும் காசுக்குச் சமனானவையும் | 1 100 | (01) |

**(20 புள்ளிகள்)**

**செய்கைகள் :** (ரூ. '000)

**செய்கை 1) வரிக்கு முன் இலாபம்**

| | | |
|---|---|---|
| இறுதி நிறுத்திவைத்த வருவாய்கள் | 6 500 | |
| ஆரம்ப நிறுத்தி வைத்த வருவாய்கள் | (2 200) | |
| | 4 300 | |
| ஒதுக்கங்களை மூலதனமாக்கல் | 2 000 | 01 |
| இடைக்காலப் பங்குலாபம் | 1 200 | 01 |
| வருடத்துக்கான இலாபம் | 7 500 | |
| வருடத்துக்கான வரி | 1 160 | |
| **வரிக்கு முன் இலாபம்** | **8 660** | |

Department of Examinations

**செய்கை 2) செலுத்திய வரி**

| | | |
|---|---|---|
| செலுத்த வேண்டிய வரி – ஆரம்ப மீதி | 600 | |
| வருடத்துக்கான வரிச்செலவு | 1 160 | 01 |
| செலுத்த வேண்டிய வரி – இறுதி மீதி | (500) | |
| **செலுத்திய வரி** | **1 260** | |

**செய்கை 3) மோட்டார் வாகனக் கொள்வனவு**

| | | |
|---|---|---|
| இறுதி மீதி | 35 500 | |
| ஆரம்ப மீதி | (30 100) | |
| | 5 400 | |
| மீள்மதிப்பீடு | (1 000) | 01 |
| அகற்றல் | 3 000 | |
| பெறுமானத் தேய்வு | 2 100 | 01 |
| அகற்றலுக்கான பெறுமானத் தேய்வு | (1 500) | |
| **பெறுதலுக்காகச் செலுத்திய காசு** | **8 000** | |

**செய்கை 4) மோட்டார் வாகன அகற்றலிலிருந்து பெற்ற காசு**

| | | |
|---|---|---|
| கிரயம் | 3 000 | 01 |
| ஆதாயம் | 400 | |
| பெறுமானத் தேய்வு | (1 500) | 01 |
| **விற்பனையிலிருந்து பெற்ற காசு** | **1 900** | |

**செய்கை 5) பங்கு வழங்கலிலிருந்து பெற்ற காசு**

| | | |
|---|---|---|
| பங்கு மூலதன இறுதி மீதி | 28 000 | |
| பங்கு மூலதன ஆரம்ப மீதி | (20 000) | |
| | 8 000 | |
| ஒதுக்கங்களை மூலதனமாக்கல் | (2 000) | 01 |
| **பங்கு வழங்கலிலிருந்து பெற்ற காசு** | **6000** | |

**(மொத்தம் 30 புள்ளிகள்)**

## வினா இல. – 5

| பகுதி | 1 | 2 | 3 | 4 | 5 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | 02 | 02 | 02 | 02 | 02 | 10 |
| (ஆ) | | | | | | 20 |
| | | | | | | 30 |

Department of Examinations

6. (அ) வரையறுத்த மிதுனன் பரிசோதனைக்கூடப் பொதுக்கம்பனியானது பழைய வைத்தியச் சோதனைக் கருவிக்குப் பதிலாக நவீன வைத்தியச்சோதனை உபகரணத்தைப் பிரதியீடு செய்ய விரும்புகின்றது. இப் புதிய உபகரணத்தினைப் பெறத் தீர்மானித்தால் பழைய உபகரணத்தை அதன் புத்தகப் பெறுமதியான ரூ. 250 000 இற்கு விற்பனை செய்யமுடியும்.

புதிய உபகரணத்திற்கான மதிப்பிடப்பட்ட காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் பின்வருமாறு:

| விபரம் | ரூ.'000 |
|---|---|
| உபகரணத்தின் கொள்வனவு விலை ............................................... | 1 800 |
| உபகரணம் தொடர்பான போக்குவரத்துக் கிரயம் .......................... | 200 |
| உபகரணத்திற்கான நிறுவுதற் கிரயம் ............................................. | 75 |
| பயன்தருகால முடிவில் உபகரணத்தின் எஞ்சிய பெறுமதி................. | 125 |
| செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில் மேலதிக தொழிற்படு மூலதனத் தேவைப்பாடு | 275 |

மேலதிக தொழிற்படு மூலதனமானது செயற்றிட்டத்தின் இறுதி வருடத்தில் மீளப் பெறப்படும். புதிய உபகரணத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்களாகும். இப்புதிய உபகரணம் கொள்வனவு செய்யப்படுமாயின் கம்பனியின் வரிக்குப் பின்னரான இலாபத்தில் வருடாந்த அதிகரிப்பானது ரூ. 210 000 ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இச்செயற்றிட்டத்திற்குத் தேவைப்படும் திரும்பல் வீதமானது 10% ஆகும். அதன் இரண்டு தசம தானத்திற்குக் கிட்டிய கழிவீட்டுக் காரணிகள் பின்வருமாறு:

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கழிவீட்டுக்காரணி | 0.91 | 0.83 | 0.75 | 0.68 | 0.62 |

**வேண்டப்படுவது:**

(1) செயற்றிட்டத்தின் ஒவ்வொரு வருடத்திற்குமான காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல்களின் அட்டவணை

(2) செயற்றிட்டத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதி (NPV)

(3) தேறிய நிகழ்காலப் பெறுமதியடிப்படையில் புதிய உபகரணத்தைக் கொள்வனவு செய்வதற்கான சிபார்சு

**(05 புள்ளிகள்)**

(ஆ) நலன்புரிச் சங்கமொன்று கோவிட் - 19 வைரசிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான அறிவுரைகள் அடங்கிய கையேடுகளைப் பிரசுரிக்கத் தீர்மானித்துள்ளது. இக்கையேடுகளைத் தனிமைப்படுத்தல் நிலையங்களிலுள்ளவர்களுக்கு கையுறைச் சோடி ஒன்றுடனும் முகக் கவசம் ஒன்றுடனும் சேர்த்து இலவசமாக விநியோகிக்க எதிர்பார்க்கிறது. இதற்கான நிதியினைச் சவர்க்கார உற்பத்திக் கம்பனியொன்று இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நன்மைபெறும் பங்குபற்றுவோர் ஒவ்வொருவருக்கும் ரூ. 1 500 வீதம் வழங்க இணங்கியுள்ளது.

இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட கிரயங்கள் பின்வருமாறு

| | ரூ. |
|---|---|
| கையேட்டினைத் தயாரிப்பதற்கு வைத்தியர்களின் ஆலோசனைக் கட்டணம் | 30 000 |
| கையேடு ஒன்றினை அச்சிடுவதற்கான கிரயம்............................................ | 700 |
| கையேட்டினைச் செவ்வை பார்ப்பதற்கான கிரயம் .................................. | 25 000 |
| அத்தியாயம் ஒன்றினை எழுதுவதற்கான கிரயம் (இக்கையேடானது 07அத்தியாயங்களைக் கொண்டுள்ளது.)........................ | 10 000 |
| கையேடுகளுக்கான படங்களை வரைவதற்கான கிரயம் .............................. | 10 000 |
| பக்கமொன்றைத் தட்டச்சிடும் கிரயம் (இக்கையேட்டின் மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கை 50ஆகும்.)........................................................................... | 300 |
| கையுறைச் சோடி ஒன்றின் கிரயம் .......................................................... | 100 |
| முகக்கவசமொன்றின் கிரயம் ................................................................ | 200 |

**வேண்டப்படுவது:**

(1) மொத்த நிலையான கிரயம் மற்றும் நன்மைபெறும் ஒருவருக்கான மாறும் கிரயம்

(2) இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்தக் கிரயத்தினை ஈடுசெய்வதற்கு :

(i) எதிர்பார்க்கப்படும் நன்மை பெறுவோரின் எண்ணிக்கை

(ii) சவர்க்கார உற்பத்திக் கம்பனியிலிருந்து எதிர்பார்க்கப்படும் நிதியுதவி

(3) இந்நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து நலன்புரிச்சங்க நிதிக்கு ரூ. 100 000 மிகையினைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படும் நன்மை பெறுவோரின் எண்ணிக்கை

(4) இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூ. 900 000 நிதியுதவி சவர்க்கார உற்பத்திக் கம்பனியால் வழங்கப்படுமாயின் நலன்புரிச் சங்க நிதிக்குக் கிடைக்கக்கூடிய மிகை

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

Department of Examinations

## வினா இல. – 6

(அ) (1) **செயற்றிட்டக் காசு உட்பாய்ச்சல், வெளிப்பாய்ச்சல் அட்டவணை** (ரூ. '000)

| காசுப்பாய்ச்சல் | வருடங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
| **காசு உட்பாய்ச்சல்கள்** | | | | | | |
| அதிகரிக்கும் செயற்பாட்டு காசு உட்பாய்ச்சல் | | 600 | 600 | 600 | 600 | 600 (01) |
| பழைய உபகரண விற்பனை | 250 | (01) | | | | |
| எஞ்சிய பெறுமதி | | | | | | 125 (01) |
| தொழிற்படு மூலதனம் மீளப்பெறல் | | | | | | 275 (01) |
| **மொத்தக் காசு உட்பாய்ச்சல்கள்** | **250** | **600** | **600** | **600** | **600** | **1 000** |
| **காசு வெளிப்பாய்ச்சல்கள்** | | | | | | |
| உபகரண கொள்வனவு விலை | (1 800) | | | | | |
| உபகரண போக்குவரத்து கிரயம் | (200) | (02) | | | | |
| உபகரண நிறுவுதற் கிரயம் | (75) | | | | | |
| தொழிற்படு மூலதன தேவைப்பாடு | (275) | (01) | | | | |
| **மொத்தக் காசு வெளிப்பாய்ச்சல்** | **(2 350)** | **0** | **0** | **0** | **0** | **0** |

**(07 புள்ளிகள்)**

(2) தேறிய நிகழ்காலப்பெறுமதி = (02) **ரூ. + 422**

**செய்கை :**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தேறிய காசுப் பாய்ச்சல் | [01] (2 100) | 600 | 600 | 600 | 600 | 1 000 | |
| கழிவீட்டுக் காரணி 10% | 1 | 0.91 | 0.83 | 0.75 | 0.68 | 0.62 [01] | |
| நிகழ்காலப் பெறுமதி | (2 100) | 546 | 498 | 450 | 408 | 620 | 422 |

**(02 புள்ளிகள்)**

(3) (01) தேறிய நிகழ்காலப்பெறுமதி நேர்க்கணியமாக இருப்பதனால் செயற் திட்டத்தை ஏற்றுக்கொள்ளலாம். **(01 புள்ளி)**

**(10 புள்ளிகள்)**

(ஆ) (1) மொத்த நிலையான கிரயம் = **ரூ. 150 000** (05)

நன்மை பெறும் ஒருவருக்கான மாறும் கிரயம் = **ரூ. 1 000** (03)

**செய்கை :**

**நிலையான கிரயம்**

| | | |
|---|---|---|
| வைத்தியர்களின் ஆலோசனைக் கட்டணம் | 30 000 | [01] |
| கையேட்டினைச் செவ்வை பார்ப்பதற்கான கிரயம் | 25 000 | [01] |
| கையேடு எழுதுவதற்கான கிரயம் (10 000 x 7) | 70 000 | [01] |
| கையேட்டின் படங்கள் வரைவதற்கான கிரயம் | 10 000 | [01] |
| தட்டச்சிடும் கிரயம் (50 x 300) | 15 000 | [01] |
| **மொத்த நிலையான கிரயம்** | **150 000** | |

Department of Examinations

| | | |
|---|---|---|
| **நன்மை பெறும் ஒருவருக்கான மாறும் கிரயம்** | | |
| கையேடு ஒன்றினை அச்சிடுவதற்கான கட்டணம் | 700 | 01 |
| கையுறைச் சோடி ஒன்றின் கிரயம் | 100 | 01 |
| முகக்கவசமொன்றின் கிரயம் | 200 | 01 |
| **நன்மை பெறும் ஒருவருக்கான மாறும் கிரயம்** | 1 000 | |

**(08 புள்ளிகள்)**

(2) (i) எதிர்பார்க்கப்படும் நன்மை பெறுவோர்களின் எண்ணிக்கை = **300** (02)

| | | |
|---|---|---|
| **செய்கை :** | | |
| மொத்த நிலையான கிரயம் ரூ. | 01 | 150 000 |
| நன்மை பெறுவோர் ஒருவருக்கான பங்களிப்பு ரூ. | 01 | 500 |
| **நன்மை பெறுவோர் எண்ணிக்கை** | | 300 |

(ii) எதிர்பாரக்கப்படும் நிதியுதவி = **ரூ. 450 000** (02)

| | | |
|---|---|---|
| **செய்கை :** | | |
| நன்மை பெறுவோர் ஒருவருக்கான நிதியுதவி ரூ. | 1 500 | 01 |
| நன்மை பெறுவோர் எண்ணிக்கை | 01 | 300 |
| **எதிர்பார்க்கப்படும் நிதியுதவி (ரூ.1 500 X 300)** | | 450 000 |

**(04 புள்ளிகள்)**

(3) நலன்புரிச் சங்க நிதிக்கு ரூ. 100 000 மிகையைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படும் நன்மை பெறுவோர் எண்ணிக்கை = **500** (03)

| | | |
|---|---|---|
| **செய்கை :** | | |
| நிலையான கிரயம் | 01 | 150 000 |
| மிகை | | 100 000 01 |
| மொத்தம் | | 250 000 |
| நன்மை பெறுவோர் ஒருவருக்கான பங்களிப்பு | 01 | 500 |
| **நன்மை பெறுவோர் எண்ணிக்கை (250 000 / 500)** | | 500 |

**(03 புள்ளிகள்)**

(4) நலன்புரிச் சங்க நிதிக்குக் கிடைக்கக்கூடிய மிகை = **ரூ. 150 000** (05)

| | | |
|---|---|---|
| **செய்கை :** | | |
| நன்மை பெறும் ஒருவருக்கான பங்களிப்பு (ரூ.) | 01 | 500 |
| நன்மை பெறும் ஒருவருக்கான நிதியுதவி (ரூ.) | | 1 500 01 |
| பங்களிப்பு விற்பனை விகிதம் (1 500 / 500) | | 0.33 |
| நிதியுதவி (ரூ.) | | 900 000 01 |
| பங்களிப்பு (ரூ.) (900 000 X 0.33) | 01 | 300 000 |
| நிலையான கிரயம் (ரூ.) | 01 | 150 000 |
| **மிகை** | | 150 000 |

**(05 புள்ளிகள்)**

**(20 புள்ளிகள்)**

**(மொத்தம் 30 புள்ளிகள்)**

**வினா இல. – 6**

| பகுதி | 1 | 2 | 3 | 4 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (அ) | 07 | 02 | 01 | --- | 10 |
| (ஆ) | 08 | 04 | 03 | 05 | 20 |
| | | | | | **30** |

Department of Examinations

7. (அ) பின்வரும் தகவல்கள் வரையறுத்த சுகந்தன் பொதுக்கம்பனியின் 2020 ஜனவரி மாதத்தில் கொள்வனவு, விற்பனை செய்யப்பட்ட இருப்பு உருப்படி 'DMI' உடன் தொடர்பானவையாகும்.

| திகதி | விபரம் | தொகை (அலகுகள்) | அலகுக்கிரயம் (ரூ.) |
|---|---|---|---|
| ஜனவரி 01 | ஆரம்ப மீதி | 500 | 20 |
| ஜனவரி 05 | கொள்வனவுகள் | 300 | 24 |
| ஜனவரி 12 | விற்பனைகள் | 400 | ? |
| ஜனவரி 15 | கொள்வனவுகள் | 300 | 25 |
| ஜனவரி 25 | விற்பனைகள் | 300 | ? |
| ஜனவரி 31 | கொள்வனவுகள் | 200 | 26 |

**வேண்டப்படுவது:**

(1) முதல் - உள் - முதல் - வெளி (FIFO) முறையின் அடிப்படையில் 31.01.2020 இல் உள்ளவாறான 'DMI' இன் இருப்புக்கிரயம்

(2) நிறையிட்ட சராசரிக் கிரய முறையின் அடிப்படையில் 2020 ஜனவரி மாதத்துக்கான விற்பனைக் கிரயம்

**(05 புள்ளிகள்)**

(ஆ) பின்வரும் தகவல்கள் விளையாட்டுக் கழகமொன்றின் புத்தகங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

| விபரம் | 31.03.2020 இல் (ரூ.) | 31.03.2019 இல் (ரூ.) |
|---|---|---|
| திரண்ட நிதி | ? | 300 000 |
| ஆயுள் அங்கத்துவ நிதி | 160 000 | 200 000 |
| விளையாட்டு உபகரண நிதி | ? | 400 000 |
| கட்டட நிதி | 1 000 000 | – |

**மேலதிக தகவல்கள்:**

(i) அங்கத்தவர் ஒருவரின் வருடாந்தச் சந்தா ரூ. 6 000 ஆகும். கழகத்தில் 31.03.2019 இல் உள்ளவாறு 60 அங்கத்தவர்கள் இருந்தனர். அவர்களுள் 10 பேர் ஆயுள் அங்கத்தவர்களாவர். ஆயுள் அங்கத்துவமானது கழகத்தின் மேம்பாட்டாளர்களுக்கு மட்டும் உரித்தானதாகும்.

(ii) வருடாந்தச் சந்தாவானது வருட ஆரம்பத்தில் முழுமையாகவோ அல்லது மாதாந்தச் சமமான தவணைக் கட்டணமாகவோ செலுத்தப்பட முடியும். அங்கத்தவர்கள் வருடாந்தச் சந்தாவை ஒரே தடவையில் முழுமையாகச் செலுத்தினால் அவர்களுக்கு 10% கழிவு வழங்கப்படுகின்றது. இக் கழிவுகள் கழகத்தின் செலவுகளாகக் கருதப்படுகின்றன.

(iii) 31.03.2020 இல் முடிவடையும் வருடத்தில் 40 அங்கத்தவர்கள் வருட ஆரம்பத்தில் ஒரே தடவையில் வருடாந்தச் சந்தாவைச் செலுத்தினர். இது 01.04.2019 இல் கழகத்தில் புதிதாக இணைந்து கொண்ட 05 புதிய அங்கத்தவர்களையும் உள்ளடக்குகிறது. ஏனையோர் தமது சந்தாவை மாதாந்த அடிப்படையில் செலுத்தியிருந்தனர்

(iv) பெறப்பட்ட நன்கொடைகள் அவற்றின் பயன்பாட்டு அளவின் அடிப்படையில் வருமானமாக இனங்காணப்படுகிறது

(v) 31.03.2020 இல் கழகமானது விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூ. 200 000 ஐச் செலவு செய்தது. இதற்கு ரூ. 150 000 விளையாட்டு உபகரண நிதியிலிருந்து பெறப்பட்டது.

(vi) 01.12.2019 இல் உள்ளக விளையாட்டரங்கை ரூ. 86 000 செலவில் நிர்மாணிப்பதற்கெனச் செயற்றிட்டமொன்றை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பில் 01.01.2020 இல் ரூ. 1 000 000 நன்கொடையொன்று பெறப்பட்டது. இது கட்டட நிதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும் கழகமானது நாட்டில் ஏற்பட்ட கோவிட் - 19 தொற்றுநிலைமை காரணமாக எதிர்பார்க்கப்பட்டவாறு விளையாட்டரங்கை நிர்மாணிக்க முடியவில்லை.

(vii) விளையாட்டுக் கழகத்தின் 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்துக்கான ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் ரூ. 250 000 ஆக இருந்தது.

**வேண்டப்படுவது:**

(1) 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்துக்கான வருமானக்கூற்று

(2) 31.03.2020 இல் உள்ளவாறான உரிமையாண்மை (ஒவ்வொரு உருப்படியினையும் தனித்தனியாகக் காட்டுக.)

(3) 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்துக்கான காசு உட்பாய்ச்சல்களும் காசு வெளிப்பாய்ச்சல்களும்

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

* * *

Department of Examinations

## வினா இல. – 7

(அ) (1) 31.01.2020 இல் இருப்புக் கிரயம் – FIFO = **ரூ. 15 100** (06)

**செய்கை :**

| திகதி | விபரம் | தொகை | விலை (ரூபா) | மொத்தம் (ரூபா) |
|---|---|---|---|---|
| ஜன 01 | இருப்பு | 500 | 20.00 | 10 000 [01] |
| 05 | கொள்வனவுகள் | 300 | 24.00 | 7 200 [01] |
| 12 | விற்பனைகள் | (400) | 20.00 | (8 000) [01] |
| 15 | கொள்வனவுகள் | 300 | 25.00 | 7 500 [01] |
| 25 | விற்பனைகள் | (300) | | (6 800) [01] |
| 31 | கொள்வனவுகள் | 200 | 26.00 | 5 200 [01] |
| | **இருப்பு** | **600** | | **15 100** |

**அல்லது**

| திகதி | விபரம் | தொகை | விலை ரூபா) | மொத்தம் (ரூபா) |
|---|---|---|---|---|
| ஜன 05 | கொள்வனவுகள் | 100 | 24.00 | 2 400 [02] |
| 15 | கொள்வனவுகள் | 300 | 25.00 | 7 500 [02] |
| 31 | கொள்வனவுகள் | 200 | 26.00 | 5 200 [02] |
| | **இருப்பு** | **600** | | **15 100** |

**(06 புள்ளிகள்)**

(2) விற்பனைக்கிரயம் – நிறையிடப்பட்ட சராசரி = **ரூ. 15 500** (04)

**செய்கை :**

| திகதி | விபரம் | தொகை | விலை (ரூபா) | மொத்தம் (ரூபா) |
|---|---|---|---|---|
| ஜன 01 | இருப்பு | 500 | 20.00 | 10 000 |
| 05 | கொள்வனவுகள் | 300 | 24.00 | 7 200 |
| | | 800 | | 17 200 |
| 12 | விற்பனைகள் | (400) | 21.50 | (8 600) [02] |
| 15 | கொள்வனவுகள் | 300 | 25.00 | 7 500 |
| | | 700 | | 16 100 |
| 25 | விற்பனைகள் | (300) | 23.00 | (6 900) [02] |
| 31 | கொள்வனவுகள் | 200 | 26.00 | 5 200 |
| | இருப்பு | 600 | | 14 400 |
| | **விற்பனைக் கிரயம் (8 600 + 6 900)** | | | **15 500** |

**அல்லது**

ஆரம்ப இருப்பு 10 000 [01] + கொள்வனவுகள் 19 900 [01] – இறுதி இருப்பு 14 400 [02] = 15 500

**(04 புள்ளிகள்)**

**(10 புள்ளிகள்)**

Department of Examinations

(ஆ) (1) **31.03.2020 இல் முடிவடைந்த வருடத்துக்கான வருமானக்கூற்று**

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| **வருமானங்கள்** | | |
| வருடாந்த அங்கத்துவ சந்தா | 330 000 (02) | |
| ஆயுள் அங்கத்துவ சந்தா | 40 000 (01) | |
| விளையாட்டு உபகரண நன்கொடை | 150 000 (01) | 520 000 |
| **செலவுகள்** | | |
| செயற்றிட்ட அபிவிருத்திச் செலவு | 86 000 (02) | |
| அங்கத்துவ சந்தா கழிவு | 24 000 (01) | |
| ஏனைய செயற்பாட்டு செலவுகள் | 250 000 (01) | (360 000) |
| **மிகை** | (01) | 160 000 |

செய்கை
(01) 6 000 X (01) 55

**(09 புள்ளிகள்)**

(2) **31.03.2020 இல் உள்ளவாறான உரிமையாண்மை**

| | | ரூபா |
|---|---|---|
| திரண்ட நிதி : | | |
| ஆரம்ப மீதி | | 300 000 (01) |
| (+) மிகை | (01) | 160 000 |
| | | 460 000 |
| விளையாட்டு உபகரண நிதி | | 250 000 (01) |
| ஆயுள் அங்கத்துவ நிதி | | 160 000 (01) |
| கட்டட நிதி | | 1 000 000 (01) |
| 31.03.2020 இல் உரிமையாண்மை | | 1 870 000 |

**(05 புள்ளிகள்)**

(3) **31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசு உட்பாய்ச்சல்களும் வெளிப்பாய்ச்சல்களும்**

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| **காசு உட்பாய்ச்சல்கள் :** | | |
| பெற்ற வருடாந்த சந்தா | 306 000 (02) | |
| கட்டட நிதிக்கான நன்கொடை | 1 000 000 (01) | 1 306 000 |
| **காசு வெளிப்பாய்ச்சல்கள் :** | | |
| விளையாட்டு உபகரண கொள்வனவு | 200 000 (01) | |
| செயற்றிட்ட அபிவிருத்திச் செலவு | 86 000 (01) | |
| ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | 250 000 (01) | (536 000) |
| **வருடத்துக்கான தேறிய காசுப்பாய்ச்சல்** | | **770 000** |

| **செய்கை :** | **(ரூ. '000)** |
|---|---|
| வருடாந்த சந்தா வருமானம் (6 X 55) | 330 (01) |
| அங்கத்தவர் சந்தா கழிவு | (24) (01) |
| பெற்ற வருடாந்த அங்கத்தவர் சந்தா | **306** |

**(06 புள்ளிகள்)**
**(20 புள்ளிகள்)**
**(மொத்தம் 30 புள்ளிகள்)**

**வினா இல. – 7**

| **பகுதி** | **1** | **2** | **3** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| (அ) | 06 | 04 | --- | 10 |
| (ஆ) | 09 | 05 | 06 | 20 |
| | | | | **30** |

Department of Examinations